விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, கார்த்திகை 8 உ ஞாயிறு (23-11-69) நம்ளான் 12 புத்தகம் 23 இதழ் 2




## கலைஞர் வருகையை தடுத்து நிறுத்த

# சிங்கள இன வெறியர்கள் தீட்டும் சதித் திட்டங்கள்!

### ஏரிக்கரை ஏடுகளும் வரிந்துகட்டுகின்றன!

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் உத்தேச இலங்கை விஜயத் திட்டத்தை முறியடிக்கவும், இலங்கைக்கு அவரை வராமல் தடுக்கவும் சிங்கள இன வெறிச் சக்திகள் மேலும் பல சதித் திட்டங்களைத் தீட்டி வருகின்றன என்று தெரிகிறது.

கருணாநிதி வருகை இலங்கைத் தமிழர்களிடையே எழுச்சியை ஏற்படுத்திவிடுமென்றும் 'பிரிவினை'ச் சக்திகளுக்கு—குறிப்பாகத் தமிழரசுக்கட்சிக்குச் செல்வாக்கினை அதிகரித்து விடுமென்றும், இ. தி. மு. க. வுக்கும் அவரது விஜயம் புதிய உசாரைக் கொடுக்குமென்றும் இவைகளை உத்தேசித்து அவரது வருகையைத் தடை செய்ய வேண்டுமென்றும், வண. மடிகே பஞ்ஞசீக தேரோ, விமல வன்ச தேரோ ஆகியோர் பிரதமரைக் கோரியுள்ளதாக அறியப்படுகிறது.

மாவட்டசபை மசோதாவுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பி வைத்ததுபோல, கலைஞர் கருணாநிதியின் உத்தேச வருகையையும் தடை செய்யுமாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்களை நிறைவேற்றுமாறு உள்ளூராட்சி மன்றங்களை சிங்கள ஜாதிக பெரமுன என்னும் இனவெறிக்கட்சி கோரியுள்ளது.

கருணாநிதி வருகையைத் தடை செய்யும்படி கோரி நாட்டில் பொதுக் கூட்டங்களை நடத்தவும் மேற்படி கட்சி முடிவு செய்துள்ளதாம்.

இது இப்படியிருக்க, கருணாநிதி வருகையை

(9ம் பக்கம் பார்க்க)

### அண்ணா மன்றம் தீக்கிரை

கல்முனையை அடுத்த பாண்டிருப்பில் அமைந்திருக்கும் அண்ணா மன்றத்திற்கு சென்ற வாரம் இனம் தெரியாத நபர்களால் தீ மூட்டப்பட்டது. தக்க சமயத்தில் அயலவர்

(9ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் வடபகுதி விஜயம்; விஷமப் பிரசாரத்துக்கு செல்வா சாட்டை!



பிரதமர் கடந்த வாரம் காங்கேசன் துறைமுகத்துக்கு அடிக்கல்நாட்டியபோது அவ்விழாவில் தமிழரசுக் கட்சியும் கலந்து கொண்டதைவைத்துக்கொண்டு யூ. என். பி. க்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையே அறுந்துபோன அரசியலுறவு புதுப்பிக்கப்படுகிறது என்று சில விஷமிகளால் நடத்தப்படும்கயிறுதிரிப்புபிரசாரத்துக்கு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் சுடச்சுடபதிலளித்தார்.

'எனது அழைப்பின் பேரில் பிரதமர் மேற்கொண்ட இந்த விஜயம் தமிழரசுக் கட்சிக்கும், யூ. என். பிக்குமிடையே ஏற்கெனவே துண்டிக்கப்பட்டுப் போன உறவு பற்றி மறுபரிசிலனைசெய்வதற்கு வழி வகுக்கக் கூடியதல்ல' என்று திரு. செல்வநாயகம் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்தார்.

காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்று தமிழரசுக்கட்சி நீண்டகாலமாக கோரி வந்ததாகவும், தேசிய அரசாங்கத்தில் தமிழரசு அங்கம் வகித்தபோது இக்கோரிக்கையைநிறைவேற்றும்படி பிரதமரை கட்சி தூண்டி வந்ததாகவும், இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, நாட்டின் பிரதமர்என்றமுறையில்துறைமுக அபிவிருத்தித் திட்டத்தினை திரு. டட்லி சேனநாயகாவே தொடக்கி வைக்க வேண்டுமென தாம் கோரியிருந்ததாகவும் அந்த அழைப்பை ஏற்றே கடந்த வாரம் பிரதமர் யாழ்ப்பாணம் வந்து மேற்படி திட்டத்தினை தொடக்கி வைத்ததாகவும் திரு. செல்வநாயகம் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் - சிங்கள ஒற்றுமைக்கு தமிழரசாரே தடையாம்!

''தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளே இந் நாட்டுத் தமிழ் சிங்கள மக்களிடையே ஒற்றுமை வளர்வதற்கு தடையாக இருக்கிறது. இதில் முக்கியமானது சமஷ்டி ஆட்சியை நிறுவுவது என்ற அவர்களது இலட்சியமாகும். அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தனியுடைமையென்றும், அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்படாது தடுக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோருகிறார்கள். இந்த இரண்டு கோரிக்கைகளுமே தமிழ் —சிங்கள ஒற்றுமையை சீரழித்து வருகிறது.

''தமிழர்களுக்கு ஒரு சலுகையை அளித்தால் வேறும் பல சலுகைகளை அவர்கள் கோருவார்கள் என்று சிங்களவர்கள் சரியாக நினைக்கிறார்கள். இதனால்தான் தமிழ் மொழிக்கு அதிக உரிமைகள் கோரப்படுவதும், தமிழ் அரசாங்க ஊழியர்

(9ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

### திருமண நன்றி நவிலல்

கடந்த 31-10-69 வெள்ளிக்கிழமை இரவு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்தேறிய எமது திருமண வைபவத்திற்கு நேரில் வருகை தந்து சிறப்பித்தோர்க்கும் 3-11-69 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தேறிய வரவேற்புபசார வைபவத்திற்கு நேரில் வருகை தந்து சிறப்பித்தோர்க்கும், அன்பளிப்புக்கள் பல தந்து எம்மைக் கௌரவித்தோர்க்கும், வாழ்த்துக்கள் அனுப்பி எம்மை மகிழ்வித்தோர்க்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இங்ஙனம்,
வடிவேற்கரசன் தம்பதிகள்

தொண்டமனாறு.
9, பம்பலப்பிட்டி, டிரைவ்,
கொழும்பு-4.

## டெல்லியில் தமிழ்ஒலிக்கும்! தி.மு.க.வின் மற்றோர் சாதனை!

இந்தியும், ஆங்கிலமும் மட்டுமே ஒலித்து வந்த டெல்லிப் பாராளுமன்றத்தில் இனி செந்தமிழும் முழங்க இருக்கிறது! அங்கு நிகழ்த்தப்படும் தமிழ் உரைகளை ஆங்கிலத்திலும் இந்தியிலும் உடனுக்குடன் மொழி பெயர்ப்பதற்கான வசதி இப்போது மத்திய அரசினால் செய்யப்பட்டுள்ளது! தமிழ் நாட்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் ஈட்டிய மற்றோர் ஈடிணையற்ற சாதனை இதுவாகும்.

இந்தியப் பாராளுமன்றத்தில் முதல் தடவையாகத் தமிழுக்கே இந்த வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. வேறு எந்த மாநில மொழிக்கும் இந்த வசதி இதுவரை செய்து தரப்படவில்லை.

எட்டுத் திக்கும் தமிழ் வளர்த்து வரும் தமிழ் நாட்டு தி. மு. க வின் இந்தச் சாதனையை உலகெங்கும் வாழும் தமிழர்கள் பாராட்டுகிறார்கள்!

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (12)

நாம் ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றைச் செய்து விடுவது இயல்பாகிவிட்ட ஒன்று: இதுதான் விதி என்று கூறுகின்றனரோ? நினைத்தது நடக்காமல் போவதால் தானே விதிப்படி நடந்து முடியும் என்று சமாதானம் சொல்லி மனதை ஆற்றிக் கொள்கின்றனர் மனிதர்கள்.

தந்தியில் காணப்பட்ட வாசகத்தைப் படித்துவிட்டு மயங்கிவிட்ட புனிதம் சுய உணர்வடைந்ததும் முதலில் விதியை வெல்ல எவராலும் முடியாது என்ற தத்துவத்துக்கே முழு ஆதரவு கொடுத்தாள்.

அவளைவிட மனம் கலங்கியவன் பிரகாஷ்தான். அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எதுவித சிந்தனையுமில்லாது ஓய்ந்து போன வெற்று மனத்துடன் புனிதத்தைப் பார்த்தான். அவன் இதழ்களில் முறுவல் மலர்ந்தது.

'புனிதம்...... நீங்கள்......' பேசுவதற்கு வார்த்தைகளே தோன்றவில்லை.

'பிரகாஷ், உடம்புக்கு ஆக்சரியமாயிருக்கின்றதா?'

'புனிதம். உன் வாழ்வே போய்விட்டது: நீ சிரிக்கின்ருயே. உனக்கு என்ன பைத்தியமா?,

'பிரகாஷ், புனிதம் மாசுபடாத புனிதமாகவே இருக்கின்ருள். கணவன் என்ற ஒருத்தருடன் ஒப்பந்தம் செய்து கொண்டேனேயன்றி சேர்ந்து வாழவில்லை. உரிமை, உறவு கொண்டாடவும் இல்லை. தவிர அழுது விட்டால் வெளிநாட்டிலேயே இறந்துவிட்ட என் கணவர் எனப்பட்ட அவர் உயிர் பெற்று விடுவாரா என்ன?'

'இருந்தாலும் புனிதம் நீ......'

'நான் மனதில் புனிதமான ஒரு நினைவை வளர்த்தேன். அது கடமையினுல் அழிந்து விட்டது என்று நினைத்தேன். ஆனுல் புனிதம் புனிதமாகவே' உடலையும், உள்ளத்தையும் வைத்திருந்தாள். வைத்திருப்பாள் என்ற நம்பிக்கை இப்போது பிறந்து விட்டது, என்று கூறிவிட்டு பிரகாஷைப் பார்த்தாள்.

பிரகாஷ் நிலத்தைப் பார்த்துக்கொண்டே நின்ருன். அவன் கண்கள் நீரை உகுத்தன. 'என்ன [illegible] காஷ்? என் சொ[illegible] கேட்க மறுத்தாளோ இன்று வேதாந்தம் பேசுகின்றீரோ என்று எண்ணுகின்றீர்களா? பெண்கள் சபலபுத்தி படைத்தவர்கள். திடீரென லட்சியம், கடமை என்று கூறி எதையாவது செய்துவிட்டு பின்பு நித்தம், நித்தம் வருந்திக் கொண்டே இருப்பார்கள். பொறுமையும், நிதான உணர்வும் கொண்டு சிந்திக்கும் திறனற்றுப் போகின்ருர்கள். இயற்கையே பெண்ணுக்கு நிரந்தரமற்ற நிலையை வகுத்து வழியாக்கி விட்டது.'

'என்ன சொல்கின்ருய் புனிதம்?'

'உண்மை தானே? சிறுவயது முதலே பெற்ருேர்கள் வீட்டில் செல்லமாக வளர்ந்துவிட்டு பருவமாகி கணவன் வீட்டை அடைந்ததும் அவள் நிலைமாறிவிடுகின்றது. அந்த நிலைகூட தாயாகி, பாட்டியாகி வரும்போதெல்லாம் மாறுகின்றது தானே? ஆனுல்...'

'புனிதம்... நான்... அவசரப்பட்டுவிட்டேன் புனிதம்!'

'பிரகாஷ் உங்கள் நிலையை நீங்கள் எண்ணி சந்தோஷமடையுங்கள். நான் சந்தோஷமாயிருப்பதே உங்கள் மகிழ்ச்சியான வாழ்வைக் கண்டுதான் ஆகவே நீங்கள் கலங்கக் கூடாது என்ருள்.

'புனிதம் நீ... நீ...'

'நான் புனிதம் தான். ஆனுல் நீங்கள் எனக்கு ஒரு வாக்குத் தரவேண்டும்.'

'என்ன புனிதம்?'

'நீங்கள் என்னைப் பற்றி பற்றி கவலைப்படமாட்டேன் என்று.'

'புனிதம்' என்று துடித்தான் பிரகாஷ்.

'என்னில் உண்மை அன்பிருந்தால் நான் கேட்டபடி செய்யுங்கள்' என்று கையை நீட்டினுள்.

வேண்டா வெறுப்பாக அவள் கையை தன் கரத்தால் தொட்டு சத்தியம் செய்தான் பிரகாஷ்.

ஒருவர் துன்பத்துக்காகவோ, இன்பத்துக்காகவோ காலம் விரைந்து நிற்பதில்லை. இயற்கையின் நியதிக்கு ஏற்ப காலமும் சுழன்று கொண்டிருந்தது. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி வருடம் ஒன்றைக் கடந்தும் விட்டது.

ஒரு வருடத்திற்குள் குறிக்கப்பட்ட மாறுதல்கள் பல நிகழ்ந்துவிட்டன.

யாருக்காக தன்மனதிலுள்ளவனை மறந்து வேறு ஒருவனுடன் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டு, அவனையும் இழந்தாளோ அதே தாய் மகளின் நிலைகண்டு அதிர்ச்சி தாங்காது படுக்கையில் விழ்ந்ததால் ஒருமாதத்திற்கிடையில் தன் வாழ்வையே முடித்துக்கொண்டாள்.

புனிதம் யாழ்நகரிலே, தன் ஊரோடு தங்கிக்கொண்டாள்.

பிரகாஷ் - கீதாஞ்சலிக்கு குழந்தையே இல்லாத குழப்பம் வேறு அவர்களை வாட்டிக்கொண்டிருந்தது.

பிரகாஷின் தங்கைக்கும், புனிதத்தின் அண்ணன் பாஸ்கருக்கும் அழகான ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையை வைத்தே தன் காலத்தை சந்தோஷப்படுத்தி வந்தாள் புனிதம்.

கல்லூரியால் வந்த பிரகாஷ் வீட்டிற்குள் நுழைந்ததும் தங்கையும் மைத்துனரும் வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி பொங்கி "சுகுணு எங்கே என் மருமகன்? கூட்டிக்கொண்டுவரவில்லையா?" என்றுன்.

[illegible] துடனிருக்கின்ருன்' என்ருன் பாஸ்கர்.

'எப்படி சௌக்கியமாயிருக்கின்றீர்களா? யாழ்ப்பாண புதினம் எப்படி?'

'புதினம் என்னண்ணு?' என்ற சப்புக்கொட்டினுள் சுகுணு.

'புனிதம் இங்கே யார் வந்திருக்கிறது என்று பாரேன்' என்ருன் பாஸ்கர்.

'நானே போய் கூட்டி வருகின்றேன்' என்று கூறி அறையை நோக்கி நடந்தான்.

'வாருங்கள் பிரகாஷ்' எங்கே என்னை மறந்துபோவீர்களோ என்று எண்ணிவிட்டேன்' என்று வரவேற்ருள் புனிதம்.

'புனிதம்! உங்களையா மறப்பேன், என் மனதில் நீங்காத நினைவாகப் பதிந்துவிட்ட உங்களை மறப்பது என்ருல்... மறந்தால் தானே நினைப்பதற்கு?'

'மாமா'

'அடே போக்கிரி, உனக்கு இது சொல்லித்தந்தது யாருடா?'

'அத்தே'

'வெறிகுட்' என்று அவனை வாங்கி மார்புடன் அணைத்தான். அவன் விழிகளில் நீர் முத்தாகச் சொரிந்தது.

'அடே கண்ணு. உனக்கு என்ன வேணும்?' என்று அவன் ஆப்பிள் கன்னத்தில் முத்தமிட்டான்.

'ம்...எனக்கு கார் வேணும் மாமா'

நமது தொடர்கதை

'ஓ.கே. கட்டாயம் வாங்கி வாரேன்' என்ருன்.

'ஆளைப்பாருடா கண்ணு. ஒரு பெண்ணைப் பெற்றுக் கொடுக்க முடியலை. காராம் கார்' என்ருள் புனிதம்.

'புனிதம், நீ சொல்வது எனக்குப் புரிகின்றது. பெண்ணைப் பெறுவது என் கையிலா தங்கியிருக்கிறது.'

'என்ன இருந்தாலும் நீங்கள்...பிரகாஷ் யாராவது டாக்டரை கொன்சல்ட் பண்ணினீர்களா?'

'இல்லையே!'

'அந்த நினைவு என்ருலும் வந்ததா?'

'கிடையாது.'

'புத்தியாவது இருக்கா உங்களுக்கு?'

'புனிதம்' அவன் விழிகளில் மீண்டும் நீர்முத்துக்கள்.

'பிரகாஷ் நீங்கள் படித்தவர்தான். ஆனுல்... என்ன பிரகாஷ். உங்களுக்கு ஒரு மகனே—மகளோ பிறந்து, அந்த செல்வத்தை நான் இப்படித் தூக்கி வைத்து நீங்கள் கிருபாவின் கன்னத்தில் கொடுத்தது போல நானும் கொடுத்து மகிழும் நாள் எந்நாளாய? சொல்லுங்கள் பிரகாஷ்? ஏன்டா கிருபா நீயே சொல்லு?'

'மாமா அழாதே மாமா'.

'டேய் கண்ணு' அவனைக் கன்னத்துடன் அணைத்துக் கொண்டான் பிரகாஷ்.

'பிரகாஷ், நாளைக்கே கீதாவைக் கூட்டிச் சென்று லேடி டாக்டரிடம் ஒருமுறை —அல்லது நீங்களே...'

'புரிகிறது புனிதம். அப்படியே செய்கின்றேன்' என்ருன் பிரகாஷ்.

'அண்ணு—அண்ணு' என்று அழைத்துக் கொண்டே உள்ளே வந்த சுகுணு அண்ணனின் நிலையைக் கண்டதும் தயங்கி நின்ருள்.

'என்னம்மா?' என்ருன் பிரகாஷ்.

'அண்ணு உங்க மருமகன் கிருபாகரனைக்கேளுங்களேன் ஒரு கதை சொல்கிருன்.'

'என்னடா போக்கிரி. அம்மாவிடம் என்ன சொன்னுய்?'

'அதுதான் முன்பே கூறிவிட்டானே. தனக்கு ஒரு காரும் காருடன் ஒரு...'

'அப்படியா? ம்' என்ருன் பிரகாஷ்.

'தருவீங்களோ மாமா?'

அவனுடைய கொஞ்சும் மழலை கேட்டு எல்லோருமே சிரித்தனர்.

'உங்களைப் போன்று அழகா நறுக்கி வைத்தாற்போல பேசுகின்ருன்' என்ருன் பாஸ்கர்.

'ஏன் அவன் அப்பா குறைந்தவரா? கிறிமினல் லோயராச்சே' என்ருன் பிரகாஷ்.

'அதெல்லாம் அவனுக்கு வேண்டாம். அண்ணனுடைய பேச்செல்லாம் சட்டத்துடனும் குத்து வெட்டுடனும். கிருபா உங்களைப் போலத்தான்...என்ருள் புனிதம்.

'அவனுக்குக் குருவாக இருப்பதே நீங்கள்தானே' என்று புனிதத்தைச் சாடினுள் சுகுணு.

அன்றைய நிகழ்ச்சிகள் யாவும் முடிந்து விட்டன; மாலையிலேயே புனிதம், பாஸ்கர், சுகுணு பையன் கிருபாவுடன் யாழ்நகர் திரும்பி விட்டனர்.

புனிதம் கூறிச் சென்ற ஒவ்வொரு வாக்கியமும் பிரகாஷின் நெஞ்சை அரித்துக் கொண்டிருந்தது. நிமிடத்துக்கு நிமிடம் அவன்வேதனை கூடியதேயன்றிக் குறைவதாகக் காணேம்;

'என்னத்தான் ஒருமாதிரி இருக்கின்றீர்கள்?'

'என்னவா? நேற்று கொஞ்ச நேரம் இந்த வீடே மழலையில் ஆழ்ந்து குலுங்கிற்றே ஞாபகமில்லையா?'

'ஏன் இல்லை?'

'நமக்கு மட்டும் கடவுள் இப்படி ஏன் வஞ்சகம் செய்கிருர்.'

கீதா கலங்கினுள். அவளுடைய அழகிய நயனங்கள் கண்ணீரில் நனைந்து படபடத்தன.

'கீதா என்று அவள் தலையை வருடினுன் பிரகாஷ்.

'ம்.'

'புனிதம் ஒரு யோசனை சொன்னுள்.'

'என்னவாம்?'

'லேடி டாக்டரிடம் உன்னை...'

'அத்தான். வேண்டாம் அத்தான்' என்று திரும்பி அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

'பைத்தியம். ஏன் பயப்படுகின்ருய். சும்மா பரீட்சித்துப் பார்ப்பதுதானே' என்று சமாளித்தான்-

'கடவுளே கண் திறக்கவில்லையாம். டாக்டர்கள்' என்று கூறினுலேயன்றி அவள்மனத்துள் இனந்தெரியாத ஒரு பயம் பூதகார உருவமெடுத்து தன்னை அமுக்க வருவதாக உணர்ந்தாள்.

கடந்த காலத்திய பயங்கரங்கள் ஒன்று சேர்ந்து பெரும் குகைவாயிலாய்வாய் பிளந்து நிற்க அதனுள்ளிருக்கும் இரகசியங்களையெல்லாம் பிரகாஷ் பார்த்துவிட்டு தன்னைக் கொல்ல வருவது போன்ற காட்சி அவள் மனதில் தோன்றியது.

'அத்தான்......அத்தான்.... என்னை ...என்னை' என்று கூறிவிட்டு மயங்கி தடாலெனச் சாய்ந்தாள் கீதா.

வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்டுப்பாருங்கள்?

திருவாளர் குயுக்தி

பொ—கலைச்செல்வி,
ஏழாலை

கே: பொன்னம்பலத்தை ஒரேயடியாகப் புகழ ஆரம்பித்து விட்டாரே நவரத்தினம், என்ன காரணம்?

ப: தமிழ் காங்கிரசில் சேருவதற்கு பொன்னம்பலத்துக்கு காக்காய் பிடிக்கிறாரோ என்னவோ!

கே: அரைச்சபாநாயகருடன் உடுப்பிட்டியில் போட்டியிடப் போகும் தமிழரசு வேட்பாளர் யார்?

ப: தனது பெயரிலேயே வெற்றியைக் கொண்டிருக்கும் ஜெயக்கொடி அவர்கள் தான்!

கே: தமிழரசுக்கட்சி ஓய்ந்து விட்டது சிலர் தவருக புரிந்து கொண்டிருக்கிறார்களே—அவர்களின் எண்ணத்தை மாற்றுவதற்கு தமிழரசுக்கட்சி நேரடிபோராட்டத்திலிறங்குமா?

ப: இனத்திற்கு ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை ஆராய்ந்து—இடம் பொருள் ஏவல் அறிந்து—அவசியமானல் மட்டும் தமிழரசுக்கட்சி போராட்டத்தில் குதிக்குமே தவிர, மற்றவர்களைத் திருதிப்படுத்துவதற்காக தனது வலிவைப் பயன் படுத்த மாட்டாது!

ஃ

கணேஸ்வரன்,
நெடுங்கேணி

கே: பொன்னம்பலம் சைக்கிளில் ஏறி விழக்கனவு கண்டேன், அதன் பலன் என்ன?

ப: 1970 தேர்தலின், போது தெரியப் போகிறது பொறுத்திருந்து பாருங்கள்!

கே: ஆனைப்பந்திக் காங்கிரசின் பத்திரிகை எங்கே மறைந்து விட்டது?

ப: தமக்கென்று எடுத்துக் கூறுவதற்கு கொள்கையற்றவர்கள் தமிழரசுக்கட்சியைத் திட்டி திட்டி எத்தனை நாளைக்குத்தான் பிழைக்க முடியும்.

ஃ

இ. தர்மபாலன்,
நெடுங்கேணி.

கே: தமிழன் பெயரால் தமிழ் கட்சிகள் வாழுகின்றனவேயல்லாமல் கட்சிகள் தமிழைக் காக்கவில்லை என்று திரு. பொன்னம்பலம் ஒரு மேடையில் கூறுகிறாரே அது உண்மையா?

ப: ஆமாம் உண்மைதான் —அவரது கட்சியைப் பொறுத்தவரை!

ஃ

செபஸ்தியான்,
திருமலை.

கே: நான் வீட்டில் இருந்து தனித்தமிழ் சொற்களைப் பயில ஆசைப்படுகிறேன், அதற்கு ஒரு வழிகூற முடியுமா?

ப: மறைமலையடிகளின் நூற்களை வாங்கி வாசியுங்கள். அத்துடன் தமிழ்நாட்டிலிருந்து 'தென்மொழி' எனும் தனித்தமிழ் ஏடு வெளிவருகிறது. அதுவும் உங்களுக்கு தனித்தமிழைப் பயில உதவும்.

ஃ

எஸ். ரி. இராணி,
காரைநகர்.

கே: உலகில் பெரிய அறிவாளி யார்?

ப. தனது துணைத்தானே பார்க்கக் கூடியவன்!

கே: சினிமாவில் காதல் காட்சிகளை இரசிக்கிறார்கள்; ஆனல் தெருவில் யாராவது காதல் செய்தால் கண்டிக்கிறார்களே ஏன்?

ப: கண்டிக்கப்படவேண்டியதுதான்! சினிமாக்காதல் வேறு — நிஜக் காதல் வேறு. உண்மையான காதலர்கள் தெருவில் காதல்புரியமாட்டார்களே!

கே: ஒரு ஆணை யாரால் புரிந்துகொள்ளமுடியும்?

ப: இன்னெரு ஆணல்!

ஃ

வே. நடேசன்,
முல்லைத்திவு.

கே: தற்போதைய அரசியல் போக்கில் தமிழ்பேசும் மக்களாகிய எங்களின் வருங்கால நிலைமை எப்படியிருக்கும்?

ப: தமிழ் அரசுக் கட்சியின் கரங்களில் பத்திரமாக இருக்கும்!

ஃ

சி. க. சண்முகநாதன்,
வண்ணர்பண்ணை.

கே: தானே திறமைசாலியென்று கூறும் 'போனு'வுக்கு 'சமஷ்டி' 'தமிழரசு' என்றல் இன்னும் விளங்கவில்லையாம... அப்படியாயின் தமிழரசுத்தந்தையிடம் அரசியல் பயிற்சிபெற அழைத்தால் என்ன?

ப: அழைக்கலாம். ஆனல் மூளைகெட்ட முண்டங்களுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பதில் தனது நேரத்தை செலவிட தந்தை முன்வருவாரா என்பதே கேள்வி!

ஃ

கி. தவராஜன்,
மட்டுவில் தெற்கு.

கே; தோல்விமேல்தோல்வி கண்ட குமாரசாமியார் மீண்டும் சாவகச்சேரி தொகுதியில் சலசலப்பு ஏற்படுத்துவதின் மர்மம் என்ன?

ப மீண்டும் தனக்குத் தானே பட்டைநாமம் தீட்டிக்கொள்ள ஆசைப்படுவதுதான்!

கே: சாவகச்சேரித் தொகுதியில் முன்பு போட்டியிட்ட சிவானந்தம் என்னசெய்து கொண்டிருக்கிறார்?

ப: பாவம் சிவானந்தத்தை பொன்னம்பலமும் குமாரசாமியுமாகச் சேர்ந்து உதைத்துதள்ளிவிட்டார்களே! கூடாதார் கூட்டத்தோடு ஏன் சேர்ந்தேன் என்று இப்போது உள்ளம் நொந்து வெதும்புகிறாராம்!

ஃ

ஏ. ஏ. எம். ஐக்கரியா,
நாவலப்பிட்டி.

கே: ஒரு மனிதனுக்கு கர்வம் எப்பொழுது உண்டாகிறது?

ப: கையிலே நாலு காசு சேரும்போது!

கே: உங்களால் வெறுக்கப்படும் முதல் மனிதர் இன்று யார்?

ப: எந்த தனிப்பட்ட மனிதனையும் நான் என்றுமே வெறுப்பதில்லை—சில மனிதர்கள் பின்பற்றும் கொள்கைகளைத்தான் வெறுக்கிறேன்!

கே: பிள்ளைபெற்றால் பெண்களின் அழகு குறைந்துவிடும் என்று சொல்லுகிறார்களே!

ப: தவருன கருத்து. பிள்ளை பெற்ற பின்புதான் ஒரு பெண்ணின் அழகு [illegible]துவம் பெறுகிறது!

ஃ

த. கென்னடி,
திருமலை.

கே: இதுவரையில் அத்துமீறி குடியேறிய சிங்களவர்களைத் தடுக்க அரசு காவல் போடாமலிருந்துவிட்டு தமிழர் பகுதியான திருமலையில் தமிழர்கள் அந்த வழியைக் கையாளும்போது மட்டும் அரசு காவல்போடக் காரணம் என்ன?

ப: ஆதிக்கம் சிங்களவர்களின் கையிலிருப்பதுதான்!

கே: திருமலைபா. உ. மாணிக்கராசா அவர்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: நல்லவர்—ஆனல் வல்லவர் என்று கூறமாட்டேன்!

கே: ஒரு தொகுதியின் பா. உ. எப்படி இருக்கவேண்டும்?

ப: வட்டுக்கோட்டை பா. உ. திரு. அமிர்தலிங்கத்தைப் [illegible] இருக்கவேண்டும்!

# தினபதியின்
# 'சாதனை' பட்டியல்

புழுகுணி ஏடான 'தினபதி' தனது ஆயிரமாவது இதழை 17-11-69ல் வெளியிடடு தனது 'சாதனைப்' பட்டியல் ஒன்றையும் வெளியிட்டிருந்தது. இதோ 'தினபதியின்' வேதனைப்பட்டியல் ஒன்றை நாமும் தருகிறோம்.

- தமிழ் பேசும் மக்களிடையே சாதி மதப் பூசலுக்குத் தூபமிட்டு வளர்க்க முனைந்து மூக்கறுபட்டது!
- தமிழ் பேசும் மக்களைப் பிரதேச ரீதியில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னர் என்று கூறு போடுவதற்குப் படாத பாடுபட்டுத் தோல்வியைத் தழுவிக் கொண்டது!
- முழுக்க முழுக்கப் பொய் செய்திகளை அலுவலகத்திலேயே உருவாக்கிப் பரப்பிவிட்டு 'தினப்பொய்' எனும் சிறப்புப் பட்டம் பெற்றது!
- புழுகத் தெரியாமல் புழுகி—பொய்யைக் கொண்டு கட்டிய கோட்டையெல்லாம் பொலபொலவென வீழக் கதிகலங்கி நின்றது!
- யாழ். மாநகர சபைத் தேர்தலில் மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்தாமல் செய்வதற்குப் பொன்னம்பலத்துடன் சேர்ந்து படாத பாடுபட்டுப் படுதோல்வியைக் கண்டது!
- தமிழரசுக் கட்சியைப் பிளவுபடுத்துவதற்கு இரவு பகலாகச் சதித்திட்டம் தீட்டிப் பொய் மூட்டைகளாக எழுதித் தள்ளி அம் முயற்சியில் சவுக்கடிபட்டது!
- கிழக்கு மாகாண மக்களுக்கும், வட மாகாண மக்களுக்குமிடையே சிண்டுமுடிந்துவிட்டு பிளவினை ஏற்படுத்தக் கூடிய செய்திகளை தயாரித்து வெளியிட்டு பட்டை நாமம் தீட்டிக் கொண்டது!
- தமிழ்பேசும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மாவட்ட சபைகள் மசோதாவை வரவிடாமல் தனது சகோதர ஏடுகளான 'சன்' 'தவச' 'சவச' போன்ற ஏடுகளுடன்சேர்ந்துபொய்ப் பிரசாரம் செய்து மண்ணைவாரிப் போட்டது!
- தாழ்த்தப்பட்ட மக்களை ஏனைய தமிழர்களிடமிருந்து பிரித்து அவர்களை பௌத்த சிங்களவர்களாக மத, இனமாற்றம் செய்யப் பாடுபட்டு அதில் தோற்றது!
- தமிழ்பேசும் மக்களை, இந்து, இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்று மத அடிப்படையில் பிரிக்கும் நோக்குடன் எழுப்பப்படும் கூச்சலான இந்துப் பல்கலைக்கழகக் கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது!
- இதே நோக்கத்துடன் திரு. பொன்னம்பலத்துக்கு சைவத் தமிழ் மக்களின் தலைவர் என்று புதியபட்டம் சூட்டியது!
- அறிஞர் அண்ணு பாராளுமன்ற மரியாதைக்கு அருகதையற்றவர் என்று பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறியதாக ஒரு பச்சைப் பொய்யை வெளியிட்டு இந்நாட்டுத் தமிழினம் முழுவதற்குமே அவமானத்தைத் தேடித்தந்தது!
- சிங்கள இனவெறியர் மிகுந்த பாராளுமன்றத்தில் அண்ணுவுக்கு அஞ்சலி செலுத்தவேண்டும என்று ஒரு விஷப் பரீட்சையில் தமிழ் காங்கிரஸ் தலைவரை இறக்கிவிட்டு —அக்கோரிக்கை மறுக்கப்பட்டதன் மூலம் மறைந்துபோன அண்ணுவின் திருப்பெயருக்கு அவமானம் ஏற்படுத்தியது!
- ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினத்தை தனது வலைக்குள் விழ்த்தி தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறும்படி செய்து இன்று அரசியல் பாலைவனத்தில் அவரை நிற்கவைத்தது!
- 'ஸ்ரீலஸ்ரீ' பிரச்சினையில் இறந்துபோன எழுத்தாளர் சங்கம் ஒன்றின் பெயரால் பண்டிதர் இரத்தினத்தைச் சம்பந்தப்படுத்தி அறிக்கையைத் தயார் செய்து வெளியிட்டு மூக்கறுபட்டது.
- கிளிநொச்சிப் பொலீஸ் அதிகாரி இடமாற்றப் பிரச்சினையில் முழுப் பொய் எழுதி அகப்பட்டுக் கொண்டு விழித்தது.
- 'தந்தி' ஏட்டில் காமச்சுவை கூட்டும் ஆபாசச் செய்திகளை எழுதும் அதே பேனுவால் 'தினபதி' ஒன்றுதான் குடும்பத்துக்கு எடுத்துச் செல்லக் கூடிய ஒரே பத்திரிகையென்று சுய விளம்பரம் செய்தது!
- இலக்கியப் படைப்புகளுக்குச் சிபாரிசு வேண்டும் என்று புதிய நிபந்தனையை விதித்து இலக்கியப் படைப்பாளிகளையும், படைப்புக்களையும் அவமதித்தது!
- உலகத் தமிழ் மாநாடு பற்றி வழவழாக் கட்டுரை யெழுதி தமக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் ஆற்றியது!
- நாவலர் விழாவில் பண்டிதர் இரத்தினத்துக்கு பேசுவதற்கு இடம் கிடைக்காமல் செய்ய முழு முயற்சி செய்து அதில் படுதோல்வியடைந்தது!
- அண்ணுவுக்குபின் தமிழக முதல்வராக நாவலர் நெடுஞ்செழியனே தெரிவு செய்யப்படுவார் என்று நம்பி நெடுஞ்செழியனது பெரிய 'புளுகுடன்' காத்திருந்து ஏமாற்றமடைந்தது!
- தி. மு. கழகத்தில் ஏற்பட்ட பூசல் எல்லாம் சுமுகமாகத்தீர்ந்து கலைஞர் தலைவராகவும், பொதுச் செயலாளராக நாவலரும் தெரிவு செய்யப்பட்டு தமிழர்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தியபோது— பெரியார் உயிரோடிருக்கும்போது கலைஞர் எப்படி தலைவராகலாம்— இது அண்ணு மரபுக்கு ஏற்றதல்லவே என்ற பிரச்சினையை எழுப்பி கழகத்துள் மீண்டும் பூசலைத் தூண்டிவிட முயன்றது!
- பண்டிதர் இரத்தினம் ஒழுங்காகப் பாராளுமன்றம் செல்வதில்லை என்று பச்சைப் பொய்யை எழுதிவிட்டு பண்டிதரிடமும், சபாநாயகரிடமும் பின்னர் பகிரங்க மன்னிப்புக்கேட்டது!
- பிரதமரது பேசசொன்றை திரித்து வெளியிட்டதை தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியதன் பின் சபாநாயகரிடமும், சபையிடமும் பகிரங்க மன்னிப்பு கோரியது!
- 'சிலை பிறந்த கதை' எழுதி சில குறிப்பிட்ட பிரமுகர்களின் புகழ் பாடி அவர்களைக் 'காக்காய்' பிடித்தது!
- நாவலர் சிலை பிறக்கவே தான் தான் காரணம் என அண்டப்புழுகு புழுகி தம்பட்டமடித்தது!
- குன்றக்குடி அடிகளாருக்கு பாலில் விஷம் கொடுத்ததாகக் கூறப்படும் பிரச்சினையில் மற்ருேர் தமிழ்த் தினசரியிடம் சிக்கிக் கொண்டு கிழியக் கிழிய வாங்கிக் கட்டியது
- அச்சுவேலிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து எட்டு மணிக்குத்தான் கடைசி பஸ் என்று தப்பும் தவறுமாக விழல்தனமாக எழுதி பொதுமக்களின் பரிகசிப்புக்கு ஆளானது!

—'கோவை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தப்புக்கணக்கு போடாதீர்!

காங்கேசன்துறைமுக அபிவிருத்தித் திட்டத்தினை தொடங்கிவைப்பதற்காக வடபகுதிக்கு கடந்தவாரம் விஜயம் செய்த பிரதமரை—தமது நீண்டகாலக் கோரிக்கையொன்றினைக் காலங்கடந்தாவது ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக தமிழ் மக்கள் வரவேற்று உபசரித்துள்ளனர். என்னதான் கருத்து வேற்றுமை இருப்பினும் வந்தாரை வரவேற்று உபசரித்தல் தமிழர்களின் தனிப்பண்பு என்பதை மனத்தில் கொண்டே பிரதமர் வடபகுதியில் வரவேற்கப்பட்டிருக்கிறார்.

பிரதமர் வடக்கே வரவேற்று உபசரிக்கப்பட்டிருப்பினும், தமிழ் மக்களின் இதயத்தில் பிடித்திருந்த இடத்தினை அவர் இழந்தது இழந்ததுதான்—தமிழ் மக்களது உள்ளங்கள் நீறுபூத்த நெருப்பாகத்தான் இன்று கனன்றுகொண்டு இருக்கின்றன என்ற உண்மையை இங்கு சுட்டிக்காட்டுவது நமது கடமையாகும்.

காங்கேசன்துறைமுக அபிவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்த பொதுத் தேர்தல் நெருங்கி வரும் கடைசி நிமிடத்திலாவது முன்வந்ததற்கு பிரதமருக்கு தமிழ் மக்கள் தங்களது நன்றியினை தெரிவித்தது உண்மைதான். நன்றி மறப்பது தமிழர் நெறியுமல்ல—

ஆனால் பிரதமரை வரவேற்ற தமிழ் மக்களின் உள்ளங்களிலே பழைய குதூகலமில்லை; நம்பிக்கையொளியில்லை; பிரதமருக்கு அவர்கள் மலர்மாலை சூட்டியிருக்கலாம்—ஆனால் மனதிலே மலர்ச்சியிருந்திருக்காது! புகழ்மாலைசூட்டியிருக்கலாம்—அது உதட்டிலேயிருந்துதான் பிறந்திருக்கும்—உள்ளத்திலேயிருந்து பிறந்திருக்காது!

ஆம், தமிழ் பேசும் மக்களுக்கு இன்று இந்த அரசாங்கம் இழைத்து வரும் அநீதிகளை—செய்யும் கொடுமைகளை எத்தனை முறை இடித்துக் காட்டியும் எடுத்துக் கூறியும் எந்த விதபயனும் கிடைக்காததால் அவர்கள் உள்ளம் கொதித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் மிக முக்கிய கல்வித் தேவையான தமிழ்ப் பல்கலைக்கழகக் கோரிக்கையை ஆட்சியாளர் தட்டிக் கழித்து விட்டதைக் கண்டு குமுறிக் கொண்டுதானிருக்கிறார்கள்!

தமிழ் மக்களுக்கு, இந்த அரசாங்கம் செய்த ஒரேயொரு பயனுடைய காரியம்—தமிழ் மொழிச் சட்ட விதிகளை 1966-ம் ஆண்டு நிறைவேற்றியதாகும். இன்று அச்சட்டம் ஒவ்வொரு திணைக்களங்களிலும் புறக்கணிக்கப்பட்டு மீறப்பட்டு வருவது கண்டு அவர்கள் மனமுடைந்து இருக்கிறார்கள். தமிழ்க் கடிதத்துக்குத் தமிழில் பதில் அனுப்பப்பட வேண்டுமென்று கூறும் தமிழ் மொழிச் சட்ட விதிகளை ஆட்சியாளர்களே இன்று மீறி, தமிழில் பதிலல்ல; சிங்களப் பதிலும் தமிழ் மொழி பெயர்ப்பும் என்று புதிய வியாக்கியானம் தருவதைக் கேட்டு வேதனையடைந்திருக்கிறார்கள்!

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு 700, 701 வது திறைச் சேரிச் சுற்றறிக்கைகளின் மூலம் வழங்கிய சலுகைகளையெல்லாம் மீறி, தமிழ் அரசாங்க ஊழியர்களை பழிவாங்கும் பல்வேறு கொடிய நடவடிக்கைகளில் கொஞ்சம்கூட ஈவிரக்கமற்று ஆட்சியாளர்கள் கெடுபிடியுடன் ஈடுபட்டிருப்பது கண்டு ஆத்திரமடைந்துதான் இருக்கிறார்கள்!

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆட்சிகாலத்திலேயே உத்தியோக மொழி கற்காமல், தமிழ் மூலமே கடமையாற்றிய பல்வேறு சிற்றூழியர்களையும் தமிழ்ப் பகுதியில் கடமை புரியும் பல் துறையினரையும்கூட சிங்களத் தேர்ச்சியில்லையென்று காரணம் காட்டி வேலை நீக்கம் செய்யும் சிறுமை கண்டு பொங்கிப்படியேதான் இருக்கிறார்கள்!

சல்பில, லக்சல, ஜாதிகசம்பத போன்ற சிங்களச் சொற்களை தமிழ் மொழியில் ஊடுருவச் செய்து தனித்தியங்கும் ஆற்றல்படைத்த தமிழ் மொழியின் சீரினை சிதைக்கும் செய்கை கண்டு சீற்றம் கொண்டு தானிருக்கிறார்கள்!

வடபகுதியிலே சிறுபான்மைத் தமிழ் மக்களிடம் சிங்களத்தைப் போதனா மொழியாகத் திணித்திடவும் அம்மக்களைப் பௌத்த சிங்களவர்களாக்கி ஏனைய தமிழ் மக்களிடமிருந்து பிரித்திடவும் சிங்கள இனவெறிச் சக்திகளுடன் சேர்ந்து, ஆட்சியாளர் செய்யும் சூழ்ச்சி கண்டு நொந்து போய்த்தான் இருக்கிறார்கள்!

போதனாமொழிப் பிரச்சினையில் தமிழ்ப் பிள்ளைகளின் போதனாமொழியாகத் தமிழேயிருக்க வேண்டுமென்ற நிலையிலிருந்து குத்துக்கரணமடித்துப் பெற்றோர் விரும்பும் மொழியைப் போதனா மொழியாக்கிட நடக்கும் தில்லுமுல்லுகள் கண்டு கொதிப்படைந்துதானிருக்கிறார்கள்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சிங்கள மக்கள் தங்கள் பிறப்பு இறப்பு திருமணப் பதிவுகளைச் சிங்களத்தில் பதிவு செய்வதற்குச் செய்து தரப்பட்டுள்ள அதே வசதி வாய்ப்புக்களை வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களுக்கும்—தமது பிறப்பு இறப்பு திருமணப் பதிவுகளைத் தமிழில் பதிவதற்கு—ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைகூட இன்னும் நிறைவேற்றப்படாதது கண்டு வேதனையடைந்துதானிருக்கிறார்கள்!

இவற்றை விட மிகுந்த ஆவலுடன்—இந்த அரசாங்கத்திடமிருந்து நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த—மாவட்ட சபைகள் மசோதா கைவிடப்பட்டதும், திருக்கோணேசர் ஆலய புனித நகர்ப்பிரச்சினையில் ஒரு பௌத்த பிக்குவின் கோரிக்கைக்கு அடிபணிந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முரணாக நடந்து கொண்டதும் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களிலே மாறாத வடுக்களாக இருந்து கொண்டேதானிருக்கின்றன.

இப்படி இந்த அரசாங்கத்தின் மீது எத்தனையோ அதிருப்திகள்—வெறுப்புக்கள் தமிழ் மக்களின் உள்ளங்களில் வேரோடியிருப்பினும்—நல்ல காரியம் ஒன்றைத் தொடங்கி வைப்பதற்கு 'பிரதமர்' சென்றதால்—அதுவும் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களின் அழைப்பின் பேரில் சென்றதால்—தமிழ் மக்கள் அவரை உபசரித்து அனுப்பியுள்ளனர்.

ஆனால் இதை வைத்துக்கொண்டு—தமது அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் மீண்டும் நம்பிக்கை கொண்டு விட்டார்கள்—[illegible] அகற்றிவிட்டோமென்றோ—வேதனைகளை நீக்கி விட்டோமென்றோ—பிரதமர் கணக்குப் போடுவாரானால், அது தப்புக் கணக்கு ஆகும் என்பதை இப்பொழுதே துணிவுடன் கூறிவைக்க விரும்புகிறோம்.

# இரு பலம்வாய்ந்த கட்சிகள் இந்தியாவில் தோன்றுவதற்கு காங்கிரஸ்பிளவு வழிவகுக்குமா?

திலகர், மகாத்மா காந்தி, வல்லபாய் பட்டேல், ஜவகர்லால் நேரு போன்ற மாபெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்டு, அரசியலிலே ஒரு புதிய வழியான அஹிம்சைப் போராட்டத்தினை சாதனையில் காட்டி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே இந்திய உபகண்டத்தினை விட்டு ஓட ஓட விரட்டியடித்த மாபெரும் ஸ்தாபனமான இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டாகப் பிளவு பட்டு விட்டது.

85 ஆண்டுகால இந்திய அரசியல்வரலாற்றினை தன்னகத்தே கொண்டு-தேசபக்தியின் உறைவிடமாக இலட்சக்கணக்கான தியாகச் செம்மல்களை உருவாக்கிய உலைக்கூடமாக- விளங்கிய இந்திய தேசிய காங்கிரஸ் எனும் பெரும் விருட்சம் வேரோடு பாறி விழுந்துவிட்டது. அதுவும் மகாத்மாவின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் ஆண்டிலேயே அவர் உருவாக்கிய ஸ்தாபனம் சுக்கு நூறாக உடைந்து விட்டது!

எந்த ஒரு ஸ்தாபனத்திலும்— அது எவ்வளவு தான் பழைமை மிக்கதென்றாலும் —சுயநலமிகளும் பதவிப்பித்தர்களும் பெருகி விட்டால் அந்த ஸ்தாபனம் உடைந்து போவது தவிர்க்க முடியாததுதான். சுயநலம் பிடித்த தலைவர்கள் ஸ்தாபனத்துள் குழப்பத்தை மூட்டிவிட்டு அதிகாரத்தினைக் கைப்பற்றவே முயலுவர். அகில இந்திய தேசிய காங்கிரசுக்கும் இந்தக் கதியே நேர்ந்து விட்டிருக்கிறது.

இந்திய சுதந்திரத்திற்காக —ஒரு பொது இலட்சியத்துக்காக போராடுவதற்கென உருவாக்கப்பட்ட காங்கிரஸ் ஸ்தாபனம் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டவுடன்- இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தவுடன் கலைக்கப்பட வேண்டும் என்று அண்ணல் காந்தியார் அன்றே தீர்க்க தரிசனத்துடன் கூறியிருந்தார்.

காந்தியாரின் திருவாக்குப்படி, அன்றே காங்கிரஸ் கலைக்கப்பட்டிருந்தால் - இந்திய விடுதலைக்கு அது செய்த தியாகங்களும் நடத்திய போராட்டங்களும் இந்திய மக்கள் மனதில்மட்டுமன்றி உலக மக்களின் மனத்திலும் அப்படியே நிலைத்திருந்திருக்கும்.

அன்று அப்படிச் செய்யத் தவறியதால் காங்கிரஸ் இன்று தனது புனிதத்தன்மை, எல்லாவற்றையும் இழந்து சாதாரண அரசியற் கட்சிகளிலும் கீழாகத் தனக்குள்ளேயே மோதிக்கொண்டு உடைந்துபோய் விட்டது.

காங்கிரஸ் உடைந்தே தீர வேண்டியேற்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் —தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் காங்கிரசுக்காகவும் இந்திய விடுதலைக்காகவும் அர்ப்பணித்த மோதிலாலின் பேத்தியை —பண்டித நேருவின் மகளை —பாரதப் பிரதமரான இந்திரா காந்தியை—காங்கிரசின் நாலணா உறுப்பினர் பதவியிலிருந்து கூட வெளியேற்றுவது என்று 'சிண்டிக்கேட்' என்னும் 'சிறுகும்பல்' எடுத்த பண்பற்ற முடிவு என்பதில் சிறிதும் சந்தேகமில்லை!

காங்கிரசிலுள்ள பிற்போக்கு வாதிகளான 'சிண்டிகேட்' என்று கூறப்படும் சிறு கும்பல் தனது இஷ்டப்படியெல்லாம் திருமதி. இந்திரா காந்தியை ஆட்டி வைக்க முடியவில்லையே என்ற குமைச்சலில் இந்திராவை வெளியேற்றுவது என்று தங்களுக்குள் எடுத்த முடிவை — காங்கிரசில் உள்ள பெருப்பான்மையான உறுப்பினர்கள் ஆதரிக்கவில்லையென்பது ஒன்றே இந்திராவின் தலைமையையும் கொள்கைகளையுமே உண்மையான காங்கிரஸ் ஊழியர்கள் விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அகில இந்திய காங்கிரசின் பொதுச்சபையை கூட்டியிருந்தால 'சிண்டிக்கேட்டுகள்' வெளியேற்றப்பட்டிருப்பார்கள் அல்லது தாமாக வெளியேறவேண்டி வந்திருக்கும். அந்த அச்சத்தின் காரணமாக 'சிண்டிக்கேட்' பிற்போக்குவாதிகள் பொதுச்சபையை கூட்ட மறுத்தனர். காங்கிரஸ் உடைந்தாலும் தங்கள் பிற்போக்கு கொள்கைகளை நிலைநிறுத்த வேண்டுமென்பதே நிஜலிங்கப்பா, மொரார்ஜி தேசாய், பட்டேல், காமராசர், அஜாய் கோஷ் போன்றோரின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

திருமதி: காந்தி தமது துணிச்சலான நடவடிக்கைகளால், பெருமை மிக்க இந்தியாவின் நிரமிக்க தலைவியாகி விட்டார். இந்திராவின் புரட்சிகரமான போக்கினால், செத்துக் கொண்டிருந்த இந்திய தேசிய காங்கிரசுக்குப் புது இரத்தம் பாய்ச்சி விட்டாரென்றே கூறவேண்டும். இந்திய தேசிய காங்கிரசை— உடைத்தவர்களும் பிளவுக்கு மூலகாரணமாக இருப்பவர்களுமான சிண்டிகேட்டுகள் இந்திராவுக்குப் போட்டியாக மொரார்ஜியைத் தமது தலைவராகத் தெரிந்தெடுத்துக் கொண்டு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து விட்டார்கள். இந்திரா ஆட்சியை வீழ்த்துவதற்குக் குறிபார்த்தபடி இன்று இருக்கிறார்கள்.

எனவே இன்றுள்ள போட்டி காங்கிரசுக்குள் மட்டுமல்ல- அகில இந்தியாவிலுமுள்ள முற்போக்கு வாதிகளுக்கும் பிற்போக்கு வாதிகளுக்கும் இடையே நடைபெறும் போட்டியாகும். இந்தப் போராட்டத்தில் இந்தியாவிலுள்ள முற்போக்குச் சக்திகள் இந்திராவின் பின்னாலும் பிற்போக்குச் சக்திகள் மொரார்ஜியின் பின்னாலும் அணிதிரண்டுள்ளன.

ஏழைகளின் நல்வாழ்வுக்காக தாம் நடத்தும் இப்போராட்டத்தில் என்ன நேர்ந்திடினும் தாம் பின்வாங்கப் போவதில்லையென திருமதி: இந்திரா உறுதி பூண்டுள்ளார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் இந்திராவை ஆதரிக்கும் காங்கிரஸ் எம். பிகள் 210 பேருடன் கம்யூனிஸ்ட் கட்சிகளும் திராவிட முன்னேற்றக் கழகமும் இந்திராவுக்குப் பக்கபலமாக இன்று இருந்து வருகின்றன. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவின்றியே தி: மு. கழகத்தினதும், சுயேச்சை எம். பிக்களினதும் ஆதரவுடன் இந்திரா ஆட்சி புரிய முடியும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்திராகாந்தியின் ஆட்சி, முற்போக்கு கொள்கைகளைப் பின்பற்றும்வரை, திராவிட முன்னேற்றக் கழகம் அவரை ஆதரிக்கும் என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்;

இந்திய தேசிய காங்கிரசில் ஏற்பட்டிருக்கும் பிளவு- இந்தியாவில் அகில இந்திய அடிப்படையில் பலம் வாய்ந்த இரண்டு சனநாயகக் கட்சிகள் தோன்ற வழி வகுக்குமா? அப்படிப் பலம் வாய்ந்த இருகட்சிகள் தோன்றினால் மட்டுமே இந்தியாவில் இன்று ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தவிர்க்க முடியும்.

—எஸ்ஸாரெம்

## மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கம்

மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கத்தின் 1969-70 ஆம் ஆண்டிற்குரிய அலுவலாளர் குழு வருமாறு:—

தலைவர்:
திரு. க. நவரத்தினசிங்கம்

துணைத்தலைவர்:
திரு. வெ. யோசெப்

பொதுச் செயலாளர்:
திரு. மா. க. ஈசனேந்திரன்

உதவிச் செயலாளர்:
திரு. எம். எ. பிள்ளைநாயகம்

பொருளாளர்:
திரு. ம. கனகசபாபதி

உதவிப் பொருளாளர்:
திரு. க. சின்மயானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீண்டாமையொழிப்பில்

# இடதுசாரிகள், தமிழ்காங்கிரஸ் போடும் வேஷம் அம்பலம்!

## சமபந்தி போசனத்தில் கலந்துகொள்ளாது டிமிக்கி!

## தாழ்த்தப்பட்ட மக்களின் துயர் துடைக்க உழைப்பது தமிழரசே!

### உரும்பராய் சம்பவம் உணர்த்தும் உண்மை!

சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உண்மையாக உழைப்பவர்கள் யார்? சமத்துவம் என்று பேசித் திரியும் சமசமாஜ கொம்யூனிஸ்ட் கட்சியினரா? அல்லது அவர்களின் வாக்குகளைப்பெறுவதற்காக நாமும் உங்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று இரகசியமாக (பகிரங்கமாகச் சொல்லப்பயந்து) சொல்லும் காங்கிரஸ் கட்சியினரா? அல்லது செயலிலேயே காட்டும் தமிழரசா என்பதை தெளிவாக அறிந்துகொள்ள—ஆராய இதோ ஓர் சந்தர்ப்பம்.

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் தோழர்களின் சுய உருவத்தை சந்தி சிரிக்கவைக்சச் சந்தியில் நிறுத்துகின்றோம். சிறுபான்மைத் தமிழ் மக்கள் சிந்திப்பார்களாக.

ஈழத் தமிழ் இளைஞர் இயக்கம்சாதிஒழிப்பிற்காக எடுத்து வரும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகக் கிராமங்கள் தோறும் சமபந்திபோசனம் நடாத்தி வருகின்றது.

இவ்விளைஞர் இயக்கத்தினார் கடந்த 25-10-69ல் உரும்பராயிலும் ஒரு சமபந்திபோசனம் நடாத்தினர். இந்நிகழ்ச்சியில் பங்குபற்றும்படி கட்சி வேறுபாடின்றி உள்ளூர் பிரமுகர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் இளைஞர் இயககத்தை சார்ந்தவர்களைத் தவிர கலந்துகொண்ட அனைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களுமேயாகும். மாற்றுக்கட்சியினர் ஒருவர்தானும் கலந்துகொள்ளவில்லை இந்நிகழ்ச்சியில்.

வாயால் மாத்திரம் சமத்துவம் பேசி சிறுபான்மைத் தமிழ் மக்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துவைக்கும் கொம்ரேட்டுக்களும், சமசமாஜிஸ்டுக்களும் ஓடி ஒதுங்குவதில் கெட்டிக்காரர்கள் என்பதைக்காட்டியுள்ளார்கள். இவர்களைக்காட்டிலும் நாங்கள் சளைத்தவர்தள் அல்ல என்று காங்கிரஸ்காரர்கள் ஓடி ஒளித்துவிட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் சமபந்தி போசனத்தில் பங்குபற்றியவர்களைக்கேலிசெய்வதிலும், தேர்தல் பிரசாரத்திற்குச் சாதியை பாவிப்பதிலும் இவர்கள் இரு பகுதியினரும் முழுமூச்சாக இருப்பது தான்.

சிறுபான்மை தமிழ் மக்கள் ஒரு சிலருடன் மாத்திரம் அரசியல் காரணங்களுக்காக சேர்வதால் அவர்களது பிரச்சினை தீரமாட்டாது. உண்மையில் இப்படியான பொது மக்கள் கலந்துகொள்ளும் இபக்கங்களால் மாத்திரமே சாதி வேறுபாடுகளைத் தகர்த்தெறிய முடியும் என்பது பலரது நம்பிக்கையாகும். அதுவே உண்மையுமாகும்.

செனட் சபை தேர்தலில் சிறுபான்மைத் தமிழர்களைக் கைவிட்டதன் மூலம் தங்கள் சுய உருவத்தைக் காட்டத் தொடங்கிய தோழர் குழாம், இப்படி இயக்கங்களை விட்டு ஓடி ஒழிவதோடு கேலி பேசுவதிலும் இறங்கியிருப்பது உரும்பராய் சிறுபான்மை தமிழ் மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது.

ஆகவே தோழர்களாயினும் சரி அல்லது மற்றவர்கள் யாராயிருந்தாலும்சரி, தமிழ் மக்களின் உரிமைக்காகவும், சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் போராடும் ஒரு சோஷலிச இயக்கம் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியென்பதை யாரும் மறுக்கமுடியாதவாறு இந்நிகழ்ச்சி காட்டுவதாக இங்குள்ள மக்கள் யாவரும் கூறிக்கொள்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களை பிளவுபடுத்தவே முற்போக்கு வாதிகள் முயற்சிக்கிறார்களேயன்றி எமது உரிமைகளைப்பெற்றுத் தருவதற்காகவல்ல என்று சிறுபான்மை தமிழ் மக்கள் கதைத்துக்கொள்கிறார்கள்.


## சுதந்திரனில்

## விரைவில் எதிர்பாருங்கள்!

"சுயாட்சிக் கழகத் தலைவருக்கு யாழ்ப்பாணப் பனங்கொட்டையின் பகிரங்கக் கடிதங்கள்"

எழுதுபவர்:— 'பனங்கொட்டை'


# இவை போதுமா? இன்னும் வேண்டுமா?

டொனமூர் கமிஷனை பகிஷ்கரிப்பதென்று ஈழத் தமிழினம் முடிவு எடுத்து கட்டுப்பாட்டுடன் அதைக் கடைப்பிடித்து வந்தவேளையில்—1934ம் ஆண்டு— சட்டசபைக்குச் செல்ல வேண்டும் என்று பேராசைபிடித்து தள்ள தமிழினத்தின் கட்டுப்பாட்டினை மீறி வடபகுதியில் இடைத் தேர்தல் நடத்த வேண்டுமென்று வெள்ளைக்கார மகாதேசாதிபதிக்கு விண்ணப்பம் செய்து தமிழினத்தின் முதல் போராட்டத்தை முறியடித்தவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

1948ம் ஆண்டு பத்து இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் அரசியலுரிமைகளைப் பறித்து அவர்களை நாடற்ற மக்களாக்குவதற்கு சேனநாயக ஆட்சி கொண்டு வந்த இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தினை—மலையகத் தமிழர்களின் அமைப்பாக அன்று விளங்கிய இலங்கைஇந்திய காங்கிரசுக்கு எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்த உறுதிமொழிகளையும் மீறி—ஆதரித்து வாக்களித்ததன் மூலம் தமிழினத்தின் முதுகில் குத்தியவர்—ஒன்றுபட்டிருந்த தமிழினத்தைப் பிரித்தவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

அமைச்சர் பதவியில் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருந்து கொண்டு யூ. என். பி. அரசாங்கம் தமிழ்ப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான சிங்களவர்களை குடியேற்றத் திட்டம் என்னும் பெயரின் கீழ் திட்டமிட்டுக் குடியேற்றி தமிழ் நிலத்தை ஆக்கிரமித்த நேரத்தில் அதை ஆதரித்து நின்றவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

தமிழரசுக் கட்சியினர் குடியேற்றத் திட்டத்தினாலேற்படப்போகும் பேராபத்தைச் சுட்டிக்காட்டி அதை தடுத்து நிறுத்த வேண்டுமென முழங்கியபோதெல்லாம், அதைக் கிண்டல்பண்ணி தமிழரசார் பூச்சாண்டி காட்டுவதாககூறி சிங்கள ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து துரோகமிழைத்தவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

1956ம் ஆண்டு ஆனி ஐந்தாம் திகதி காலி முகத்திடலில் தனிச் சிங்கள மசோதாவுக்கு எதிராக நடந்த தமிழ் பேசும் மக்களின் மாபெரும் சத்தியாக்கிரப் போராட்டத்தினை—காலஞ் சென்ற பிரதமரும் சிங்களம் மட்டும் சட்டத்தின் தந்தையுமாகிய திரு. பண்டாரநாயகாவுடன் சேர்ந்து பாராளுமன்றத்தில் கேலிபேசி—போராட்டமல்ல இது; ஆர்ப்பாட்டம் என்று கிண்டல் செய்து அறிக்கை விடுத்து இனத்தைக் காட்டிக் கொடுத்தவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

தனிச் சிங்களச் சட்டத்தினை தமிழினம் ஒன்றுபட்டு எதிர்த்துப் போரிட்டு நின்ற போது, அச்சட்டத்தினை ஏற்றுக்கொண்டு அதன் கீழ் சலுகை பெறுவோம் என்று 1956ம் ஆண்டே கருத்தறிவித்து தமிழினத்தைக் காட்டிகொடுத்தவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

சிங்கள சிறீ எதிர்ப்பு போராட்டத்தினை தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து ஆரம்பித்துவிட்டு சிறை செல்ல வேண்டியேற்படும் என்று தெரிந்தவுடன் ஒரு நாளிலேயே அப்போராட்டத்துக்கு முழுக்கு போட்டுவிட்டு பதுங்கிவிட்டவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை ஆட்சி மொழியாக்கவும் இவ்விருமாகாணங்களுக்கும பிரதேச சுயாட்சி வழங்கவும் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் தமிழரசுக் கட்சி, பண்டா ஆட்சியுடன் 1957ல் செய்துகொண்ட (பண்டா—செல்வா) ஒப்பந்தத்துக்கு எதிராக கொக்கரித்து எழுந்து அவ்வொப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு காரணஸ்தர்களில் ஒருவராக இருந்தவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

1956ம் ஆண்டு இந்நாட்டின் தலைசிறந்த தமிழறிஞர்களாலும் பேராசிரியர்களாலும் கட்சி பேதமின்றி கல்வியடிப்படையில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு ஒரு சதமும் கொடுக்காதவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினை முறியடிப்பதற்கு காலஞ் சென்ற சு. நடேசனுக்கு—மூதவை உறுப்பினர் பதவியொன்றையும் கொடுத்து—வடக்கிலே கலாசார பல்கலைக் கழகம் வேண்டும் எனக்கோருமாறு அன்று தூண்டிவிட்ட திருமதி சிறீமாவின் சூழ்ச்சி வலையினை இன்று தூக்கிப்பிடித்துக்கொண்டு பெரும்பான்மைத் தமிழ் மக்களின் கருத்துக்கு முரணாக இந்துப் பல்கலைக் கழகம் கோரி தமிழ் பேசுமினத்தை மத அடிப்படையிலும் பிரதேச அடிப்படையிலும் கூறுபோட முனைபவர்;

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

1957ம் ஆண்டு பெப்ரவரி 4ந் திகதி கடைகளையெல்லாம் மூடிவைத்து கறுப்புக் கொடி பிடித்து சுதந்திரத்தினத்தை தமிழினம் ஒன்றுபட்டு பகிஷ்கரித்தபோது, கடையைத் திறந்துவைக்குமபடி கோரி கலவரம் ஏற்படுத்தி தமிழினத்தின் ஐக்கியத்துக்கு வெடி குண்டு வீசியவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

ஒற்றையாட்சியை எதிர்த்துப்போராட 1947ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்களிடம் அதிகாரம் பெற்றுக்கொண்டு—இரு ஆண்டுகளுக்கிடையிலேயே—தமிழ் மக்களின் உத்தரவைப் பெருமல்—அதே ஒற்றையாட்சி அமைப்பினை ஏற்றுக்கொண்டவர்!

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

தனிச் சிங்களத் திணிப்புக்கு எதிராக 1961ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருதிங்களாக நடைபெற்ற உலகம் வியக்கும் மறியல் போராட்டத்தில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்தது மட்டுமல்ல—சிறிமா ஆட்சியுடன் சேர்ந்து கொண்டு போராட்டத்தினை கைவிடவேண்டும் என்றும் அறிக்கை விடுத்தவர்

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

தேசிய அரசாங்கத்தின் மூலம், தமிழ் பிரதேசத்துக்கு ஓரளவு உள்ளூர் நிர்வாகத்தில் சுயாட்சி அளிக்க வகை செய்யும் மாவட்டசபை மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்ற தமிழரசுக் கட்சி எடுத்த முயற்சிகளையெல்லாம் பாழாக்கியவர்.

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

யூ. என். பி. ஆட்சி தமிழினத்துக்கு எதிராக இன்று எத்தனையோ அநீதிகளை விளைவித்தும்கூட ஆட்சியாளருடன் பசைபோல ஒட்டிக்கொண்டிருப்பவர்கள்

—ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரது சிட கோடிகளும்!

—39 வருட அரசியல் வாழ்வில் தமிழ் மக்களை நான் காட்டிக்கொடுக்கவேயில்லை என்று கூறியிருக்கும் அரசியல் 'அரிச்சந்திரன்' ஜீ. ஜீ. அவர்களே! மேற்கூறப்பட்டதற் [illegible] அரசியல் அகராதியில் என்ன அர்த்தம்? நீங்கள் செய்த துரோகங்களின் மேற்படி பட்டியல் போதுமா? இன்னும் வேண்டுமா?

—'கோவை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியை விட்டால் சலு…

# எட்டப்பர்கள் இதோபதே…

அன்புள்ள நண்பா,

ஈழத் தமிழகமெங்கும் எழில் பூத்துக் குலுங்குகிறது. எங்கும் ஒரே பசுமை; செல்வம்; செழிப்பு!—கனி குலுங்கிடும் மரங்கள்; பழ முதிர் சோலைகள்: மலர்ந்து மணம் பரப்பும் பூஞ்செடிகள்; அந்த மலர்களைக் கொய்யும் மாந்தளிர் மேனி மங்கையரின் வளையொலிகள்! கொள்வாரில்லை அதனால் கொடுப்பாருமில்லை என்ற நிலை! வளம் நிறைந்த திருவிடமாக வண்டமிழர் நாடுதிகழ்ந்திடுகிறது! மூலைமுடுக்கெங்கும் முத்தமிழ் முழக்கம்! இன்னிசை! நம் இதயம் எல்லாம் குளிர இன்பத் தமிழ்மொழி ஆட்சி புரிகிறது! வரண்ட பிரதேசம் என்று கூறப்பட்ட ஈழத்தமிழகம் வளமிக்க நாடாகி மாற்றார் கண்களை உறுத்துகிறது! தமிழ்க் கவிஞர்களும் புலவர்களும் பேரவையில் கூடி தமிழாய்கின்றனர் மெத்த ஆர்வமுடன்!

ஈழத் தமிழ் நாட்டின் ஈடிணையற்ற துறை முகங்களான காங்கேசன்துறையிலும், ஊர்காவற்றுறையிலும் திருமலையிலும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை கப்பல்கள் நங்கூரமிட்டிருக்கின்றன! அயல் நாட்டு கடல் வணிகர்கள் நம் நாட்டுள் புகுந்து தம் நாட்டின் எழிலை அள்ளிப் பருகுகிறார்கள். நமது நாட்டு முத்துக்களை

ஆட்சி கேட்கலாம்! திட்டம், அமைப்பு, மக்கள் நம்பிக்கை எதுவுமற்ற சுந்தரலிங்கம் 'பிரிவினை' கோரலாம்!

ஆனால் தமிழ் பேசும் மக்கள் தமது நாட்டைத் தாமே ஆள வேண்டும் என்ற உணர்ச்சிக் குரலை முதன் முதலில் எழுப்பி—தமிழினத்துக்கு நம்பிக்கையூட்டி இன விடுதலைக் கொள்கையை இயக்க ரீதியாக இன்று வளர்த்து விட்டிருப்பது தமிழரசுக் கட்சிதான் என்பதை யாருமே மறுத்திட முடியாது!

தமிழரசுக் கட்சியை ஒழித்துவிட்டால்—சிதைத்து விட்டால் — தமிழர்களின் சுதந்திரக் குரலும் அத்துடன் அணைந்துவிடும் என்பதனைச் சிங்களத் தலைவர்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். அதனால் தான் நண்பா, அவர்கள் நவரத்தினம், சுந்தரலிங்கம் போன்றவர்களைத் துளியும் பொருட்படுத்துவதில்லை! தமிழரசுக்கட்சி மீது தான் சினங் கொண்டு பாய்கிறார்கள்!

தோழா, காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவது மகிழ்ச்சிக்குரியதுதான்! ஆனால் காங்கேசன்துறை முகத்தை நிர்வகிக்கும் அதிகாரமும் தமிழர்களின் கைகளுக்கு வந்து சேரவேண்டும்

## பயணம் நீண்டதாயினும்

## இன விடுதலைக்கு

## அயராது உழைத்திடுவோம்!

அதோ தேடித்தேடி வாங்குகிறார்கள். பிற நாட்டுப் பொருட்களை இறக்கிவிட்டு நம் நாட்டு பொருட்களை ஏற்றிக்கொண்டு சாரிசாரியாகக் கிளம்புகின்றன அந்நியர் கப்பல்கள்! இதை மகிழ்ச்சியுடன் வேடிக்கைப் பார்த்திருக்கின்றனர் நமது சிறுவர்களும் சிறுமியரும்!

என்ன நண்பா இது, ஏதாவது கனவு கண்டாயோ என்று வினவுவாய்- ஆமாம் நண்பா கனவுதான் காணுகிறேன்- ஆனால் ஒரு நாள் பலிக்கப்போகும் கனவு!

காங்கேசன் துறைமுக அபிவிருத்தித் திட்ட வேலைகள் கடந்த வாரம் தொடக்கி வைக்கப்பட்டபோது, இந்நாட்டை சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தை நமது தந்தை செல்வநாயகம் அவர்கள் நினைவு படுத்தினாரல்லவா? அந்த நினைவில் மூழ்கியபோதுதான் எனக்கு மேற்கண்ட 'கனவு' தெரிந்தது நண்பா!

அற்றை நாள் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆண்ட நாள்; மாற்றார் கையை எதிர்பார்க்காமல், வேற்றினத்தின் நல்லெண்ணத்துக்காக ஏங்கிக் கிடக்காமல் நமது பூமிக்கு நாமே 'மன்னர்களாக' இருந்திட்ட காலம்! சலுகைகளுக்காக தமிழர்கள் யாரையும் இரக்காமல் தம்மை இரப்பவர்களுக்கு சலுகை வழங்கிய பொற்காலம்! அடிமைத்தனம் என்ற வார்த்தையே தமிழ்மொழியில்தோன்றாக் காலம்! தமிழன் யாருக்கும் அடிமையாகாமல் யாரையும் அடிமைப்படுத்தாமல் இருந்திட்ட பெருமை மிகு காலம்!

அந்தப் பொற்காலம் மீண்டும் வந்திடுமோ? குழி விழுந்திட்ட கண்களிலே மீண்டும் ஒளி பிறந்திடுமோ? என்று நீ ஆர்வத்தோடு பார்க்கிறாய்- நிச்சயமாக அந்தக் காலம் ஒன்று வரத்தான் போகிறது நண்பா! ஈழத் தமிழகம் அரசுரிமை பெற்று மீண்டும் தலை நிமிரத்தான் போகிறது ஒரு நாள்!

அந்தக் காலத்தை விரைவிலே கண்டிடத்தான் தமிழரசுக்கட்சி திட்டமிட்டு உழைத்து வருகிறது என்பது உனக்குத் தெரியாதா என்ன?

நண்பா, இன்று தமிழினத்தின் ஒன்றுபட்ட விடுதலைக் குரலை உடைத்துவிட—பலமிக்க எழுச்சி சக்தியை நசுக்கிவிட—மாற்றாரால் தூண்டப்பட்டோ பொறாமை பிடித்தோ நம்மை விட்டுப் பிரிந்து போன நவரத்தினம் 'டொமினியன்'

என்பது தான் தமிழரசுக் கட்சியின் இலட்சியமாகும்!

இந்த இலட்சியம் நிறைவேறும் வரை—தமிழர்களுக்கு தங்களைத் தாங்களே ஆளும் உரிமை கிடைக்கும் வரை—துறைமுகங்களைத் திருத்துவதாலும் தமிழ்ப்பகுதிக்கு ஒரு சில பொருளாதார ரீதியான உதவிகளை செய்வதாலும் மட்டும் தமிழரசுக் கட்சியை திருப்திப் படுத்தவோ தமிழினத்தின் சமஷ்டிக் கோரிக்கையை ஈடுகட்டவோ முடியாதென்பதை சிங்கள ஆட்சிபீடம் தெளிவாக உணர்ந்துகொள்ளட்டும்!

நண்பா, இணைப்பாட்சிக் கோரிக்கையை கைவிடச் செய்வதற்கு சிங்கள ஏகாதிபத்தியம் தமிழரசுக் கட்சியை பல தடவைகளில் பயமுறுத்திப்பார்த்தது! அடக்கு முறையை நீட்டியது; வெஞ்சிறையில் பூட்டியது; மனைவி, மக்களிடமிருந்து, உற்றார் உறவினரிடமிருந்து நம் இயக்கத்தினரை மாதக்கணக்காகப் பிரித்து வைத்து பழிவாங்கிப்பார்த்தது; நம் இயக்கத் தோழர்கள் சிலரைச் சுட்டுப்பொசுக்கியும் பார்த்தது: நம் இயக்க ஏடான சுதந்திரனுக்கு பல தடவைகளில் வாய்ப்பூட்டு போட்டும் பார்த்தது.

இவற்றுக்கெல்லாம் தமிழரசுக் கட்சி தளர்ந்திடவில்லை: இழிமொழிகளை, பழிச்சொற்களை—தொல்லைகளைத் துயரங்களையெல்லாம் நம் இயக்கத் தோழர்கள் ஏற்றுக் கொண்டனர் இன் முகத்துடன்! தியாக வேள்வியில் குளிக்க குளிக்க நம் இயக்க தோழர்களுக்கு—தமிழின விடுதலையில் இன்னும் அழுத்தமான நம்பிக்கை ஏற்பட்டதே தவிர சோர்ந்துவிடவில்லை; அயர்ந்திடவில்லை!

தமிழரசுக் கட்சியில் சேர்ந்திட்டால் கிடைக்கும் பரிசுகள்—இரத்தம், வியர்வை, கண்ணீர், குண்டாந்தடியடி வெஞ்சிறை—சில சமயங்களில் துப்பாக்கிக் குண்டுகள்—என்றெல்லாம் அறிந்த பின்னும் தமிழ் இளைஞர்கள் பதுங்கிடவில்லை; பயப்படவில்லை; பல்லாயிரக் கணக்காக தமிழரசு அணியில் சேர்ந்து பாசறை அமைத்திட்டனர்;—அத்தகைய அஞ்சா நெஞ்சம்படைத்த வீர இளைஞர்களின் கோட்டமாகத்தான் தமிழரசுக் கட்சி திகழ்ந்தது; திகழ்ந்திடுகிறது!

நண்பா, இன்று 19, 20 வயதினை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் இன்றைய வாலிபத்தோழர்களுக்கு தமிழரசுக்

கட்சியின் பாரம்பரியம், கட்சி நடத்திய வீரமிகு போராட்டங்கள் — இவையெல்லாம் சரிவரத் தெரிந்திருக்குமென்று நான் நினைத்திடவில்லை. அவற்றையெல்லாம் எடுத்துக்கூறி அவர்களை மாற்று முகாமுக்குள் நுழைந்து விடாபடி நம்மவர்களாக்குவது உன்போன்றோரின் கடமையாகும்.

நண்பா, நம் இயக்கத் தலைவர்கள் மக்களை முன்னே தள்ளிவிட்டுப் பின்னே பதுங்கும்பான்மை படைத்தவரல்லர் என்பதைக் கடந்த கால வரலாறே கூறுகிறது.

1956-ம் ஆண்டு ஆனி ஐந்தாந் திகதி காலி முகத்திடலில் தம் அருமைச் செல்வங்கள் காடையர்களால் தாக்கப்பட்ட கொடுமையைக் கண்ணாரக் கண்ட பின்பும் அறப் போராட்டத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்த தியாகச் சுடரொளி-செம்மல் செல்வநாயகம், அதைத் தொடர்ந்து நடந்த உரிமைப் போராட்டங்களின்போது—தமது தள்ளாத வயதிலும் ஏற்றுக் கொண்ட துயரங்கள் தொல்லைகள் எத்தனை எத்தனை?

தோழா! ஒரு கணம் எண்ணிப் பார்! தந்தை செல்வநாயகம் தோன்றியிரா விட்டால் நமது நிலையென்ன? ஈழத்தில் தமிழினம் நசிந்து சிதைந்து, பிளவுபட்டு என்றோ அழிந்திருக்குமன்றோ? இதை நினைத்திடவே இதயம் நடுங்குகிறதே! எனவே தான் செல்வா அவர்கள் இந்த நாட்டுத் தமிழினம் செய்த தவப் பயன் என்று நாம் பெருமையோடு கூறுகிறோம்!

தமிழர்களின் விழிகளைத் திறந்து விட்டவர் செல்வா! தமிழா நீ இந்த நாட்டின் அடிமையல்ல; நீ இந்த நாட்டின் சொந்தக்காரன்; உனது முந்தையர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்த நாடு இந்த நாடு. இங்கே உனக்கெனத் தனியான பிரதேசமுண்டு உயர் தனிச்செம்மொழியுண்டு! எனவே உனது நாட்டை நீயே ஆளும் உரிமை பெற்றவன் நீ! எனவே அந்த உரிமையை மீட்கப் போராடு! என்று விடுதலைத் தீயை மூட்டி விட்டிருப்பவர் நமது தந்தை அவர்கள!

ஆகவே தான் நண்பா, அவர் காலத்தில் வாழ்வதில் நாமெல்லாம் பெருமைப் படுகிறோம். அவரது தலைமையின் கீழ் பாசறையமைத்துச் செயல்படும் வாய்ப்புக் கிடைத்ததை நாம் செய்த 'புண்ணியம்' என்று கூறுகிறோம்.

தோழா, சமஷ்டியரசிற் கோரிக்கை எப்போது வெற்றி பெறும் என்று சிலர் கேட்கிறார்களல்லவா? அதற்குத் தமிழரசுக் கட்சியின் தொடக்க நாளிலேயே தந்தை அவர்கள் தெளிவாகப் பதில் கூறிவிட்டார்கள்!

"நமது கோரிக்கை சில வேளைகளில் இந்தத் தலைமுறையிலேயே வெற்றி பெறலாம். அல்லது அடுத்த தலைமுறையில் வெற்றி பெறலாம். ஆனால் நாம் செய்யக் கூடியது—நமது கோரிக்கையை விடாப்பிடியாக ஒலித்துக் கொண்டிருப்பதுதான். நமது கொள்கையில் நாம் தளர்ச்சியடையக் கூடாது. காலம் கனியும்வரை காத்திருக்க வேண்டும்."

இவ்வாறு நண்பா. தமிழரசுத் தந்தை அவர்கள் நறுக்குத் தெறித்தாற்போல அப்பொழுதே பதில் கூறிவிட்டார்கள்.

தமிழரசுக்கட்சித் தலைவர்கள், இயக்கத்தினரை எதற்கும் அஞ்சாத வீரர் கோட்டமாக மாற்றியமைத்திட்டது போலவே தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்தும் 'அச்சம்' என்ற வார்த்தையை அடியோடு அகற்றிவிட்டனர்!

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா-

என்று பாடிய கவிஞரது எண்ணத்தை ஈழத் தமிழகத்தைப் பொறுத்தவரை செயலாக்கிவிட்டது நமது கட்சி!

நண்பா, 1958-ம் ஆண்டு சிங்களவர்களின் மிருக வெறியால் தாக்குண்டு-சொத்திழந்து சுகமிழந்து உயிரிழந்து உடைமைகளை இழந்து அகதிகளாக கப்பலில் ஏறி வடகரையில் வந்திறக்கிய தமிழர் கூட்டத்தினை மறந்திருக்கமாட்டாய்! அக்கலவரத்தினைத் தொடர்ந்து 1960ல் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது தமிழரசுக் கட்சிக்கு எதிராக மாற்றார் என்னென்ன பிரச்சாரங்களை மேற்கொண்டனர் என்பதனை எண்ணிப் பார்!

அடிவாங்க வேலி…
சுக் கட்சியை ஆதரியு…

அகதிகளாக வே…
மூரசை ஆதரியுங்கள்!

இப்படி— இதைவ…
மாக வெல்லாம் பிரச்…
டது- அறிவாய்!

ஆனால் தமிழ் மக்…
செவி மடுத்தார்களா…
தப் பிரச்சாரங்களு…
1956-ம் ஆண்டுத் தே…
தமிழரசுக்கட்சியில் …
அனுப்பிய மக்கள் …
பேரை அனுப்பி வை…
மறந்திருக்கமாட்டாே…

எனவே தான் ந…
தெரிவது என்ன? வி…
கொடுமைகளையும் இ…
கும் மனப்பக்குவத்…
தமிழ் மக்கள் பெற்று…
அல்லவா? இந்த மன…
படுத்தியது தமிழ…
தான சாதனையன்றோ…

நம் இயக்கத்தினை…
கையை பயமுறுத்தி- …
கைவிடச்செய்ய முடி…
அறிந்துகொண்ட சிங்…
1965 க்கு பின் புத்…
கையாண்டு பார்த்தது…
சமரசத்துக்கு அழைத்…

உண்மையான கா…
ரசத்துக்கு ஒருபோது…
லேயே! எனவே தமிழி…
சினைகளில் சமரசம் கா…
தயங்கிடவில்லை— அ…
கொள்கையான சமஷ்…
விட்டுக்கொடாமல்!

## அர…
## மட…

ஏன் தான் வினைக…
கையில் பிடிவாதமா…
பேசாமல் விட்டு விடு…
நிறையச் சலுகைகள்…
ஆசை காட்டியது சிங்…
அசைந்து கொடுத்திட…

சிங்களக் கட்சிகளு…
தினசரிகளும் சமஷ்…
விட்டு விடுங்கள்; வி…
களை எங்களுடன் …
கொள்ளுகிறோம்; எ…
கூறிப் பார்த்தன. …
றுச் சித்திரம் வாங்கு…
தாம் என்று கூறிவிட்…
தலைவர்கள்!

எனவே தான் ந…
களின் தயவினையும் …
யும்" நம்பி வாழும் …
சிக்கு உயிரூட்டி—த…
மாகத் தமிழரசுக்கட்…
தலில் முறியடித்து—…
குவதற்குச் சிங்கள …
சிங்களக் கட்சிகளும்…
சரி ஏடுகளும் திட்ட…
தொடங்கியுள்ளன!

## சிங்கள…

## …

## …

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லுகை பெறலாமாம்-
# நசம் செய்கிருர்கள்!

ங்க வேண்டுமெனின் தமிழர
ஆதரியுங்கள்!
ாக வேண்டுமெனின் தமி
ரியுங்கள்!!
— இதைவிட இன்னும் மோச
ாம் பிரச்சாரம் செய்யப்பட்
ாய்!

தமிழ் மக்கள் இதற்கெல்லாம்
தார்களா? கிடையாது! இந்
சாரங்களுக்குப் பதிலடியாக
ண்டுத் தேர்தலில் 10 பேரை
ட்சியில் பாராளு மன்ற ம்
மக்கள் 1960 தேர்தலில் 14
லுப்பி வைத்த சம்பவத்தை
மாட்டாயே!

தான் நண்பா, இதிலிருந்து
ன்ன? விடுதலைக்காக எத்தனை
ளையும் இன்னல்களையும் தாங்
பக்குவத்தினை இந்நாட்டுத்
பெற்றுவிட்டார்கள் என்பது
இந்த மனப்பக்குவத்தினை ஏற்
தமி[illegible]ச்சுட்[illegible]டிய மகத்
னயன்ருே!

பக்கத்தினை- நமது கோரிக்
முறுத்தி- கொடுமைப்படுத்தி
ய்ய முடியா தென்பதை
ண்ட சிங்கள ஏகாதிபத்தியம்
பின் புது முறையைக்
பார்த்தது. நமது கட்சியைச்
த அழைத்தது.

யான காந்திய வாதிகள் சம
ருபோதும் பின் நிற்பதில்
வ த[illegible]ழினத்தின் சில பிரச்
மரசம் காணத் தமிழரசார்
லை— ஆனல் மூலாதார
ான சமஷ்டியை ஒரு சிறிதும்
ாமல்!

கட்டப் பொம்மனைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒரு எட்டப்பன் கிடைத்தது போல—சங்கிலி மன்னனைப் பிடித்துக் கொடுக்க ஒரு காக்கை வன்னியன் கிடைத்ததுபோல—இந்நாட்டுத் தமிழர்களின் ஏகோபித்தகோரிக்கையான சமஷ்டிக் கோரிக்கையைக் காட்டிக் கொடுக்க ஒரு தமிழ் காங்கிரஸ் சிங்களவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

நண்பா, எந்த இனமும் தனது உரிமைக்காகப் போராடும்போது எதிரியுடன்

'சலுகைகள்' இவை தாம்! அடுத்தும் இவர்களை அனுப்பினுல் இவர்கள் இறுதியாகப் பெற்றுத்தரக்கூடிய 'சலுகை' தமிழினத்துக்கு ஒரு துளி நஞ்சாகத்தானிருக்க முடியும்!

நண்பா, ஒற்றையாட்சி அரசியலமைப்பினை தமிழ் காங்கிரசு எதிர்க்கத் தயங்குவது ஏன் தெரியுமா? சிங்களவர்களுக்கு 'கோபம்' வருமென்று! எனவே ஒற்றையாட்சியின் கீழ் சிங்கள மக்கள் செய்வதையெல்லாம் பொறுமையோடு

தலைவருக்கு ஓட்டவைத்துவிட்டோ என்னவோ தமிழ் காங்கிரஸ் சார்பில் சாவகச்சேரித் தொகுதிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்திருப்பவர்.

அவர் பின்வருமாறு கூறியிருக்கிருர்—17-11-69 டெயிலிமிரர் ஏட்டிலே இருக்கிறது.

"வடபகுதியில் பல கைத்தொழில்களை ஆரம்பிக்க வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றன. காடு வெட்டி விவசாயம் செய்ய ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இவற்றுக்கு நீர் பாய்ச்ச நூற்றுக்கணக்கான குளங்களைக் கட்டவும் முடியும். இவையெல்லாவற்றையும் மத்திய அரசாங்கத்தின் உதவியுடன்தான் செய்யமுடியும். இந்த உதவியைப்பெற சமாதானமும் அமைதியும் தேவை."

—இவ்வாறு கூறியிருக்கிருர் குமாரசாமியார்.

தமிழ்ப்பகுதி மிகுந்த வளம் படைத்தது; செப்பனிடப்பட்டால்—சீர் செய்யப்பட்டால் பொருளாதாரத் துறையில் தலைநிமிர்ந்து நிற்கமுடியும்—வேறு யார் கைகளையும் எதிர்பாராமல் —என்பதில் குமாரசாமிக்கு இருக்கும் நம்பிக்கையை விட நமக்கு அதிகம் இருக்கிறது!

# கண்களை விற்று சித்திரம் வாங்கிடும்

# கல்லாத மூடரா தமிழ் மக்கள்!

சேர்ந்து துரோகமிழைக்கும் கும்பல் ஒன்றும் இருந்து கொண்டே இருக்கும்—இது தவிர்க்க முடியாதது! இந்தக் கும்பல் தமிழ் மக்களிடையே சற்று அதிகமாக இருப்பது தமிழினம் செய்த 'பாவம்' தான்!

1956-ம் ஆண்டு முதல் சிங்கள அரசின் கொடுமைகளைத் தாங்கித் தாங்கி உரமேறிவிட்ட தமிழர்கள்—1958-ம் ஆண்டு பயங்கர இனக் கலவரத்தின் பினனும் முன்னைவிட வேகமாகச் சமஷ்டிக் கோரிக்கையை ஆதரித்து வரும் நம் மக்கள், சிங்களக் கட்சிகளால் தூண்டி விடப்பட்டுத் தமிழ் காங்கிரஸ் போடும் மாய்மாலக் கூச்சலால்தாஞ மயங்கிவிடப் போகிருர்கள் என்பாய்! உண்மை தான்! இருந்த போதிலும் உண்மைகளை எடுத்துரைத்தல் நமது கடமையன்ருே?

ஒரு இனத்தின் சுதந்திரக்குரலை நசுக்குவதற்கு— எந்த இனம் சுதந்திரம் கோரு கிறதோ அந்த இனத்திலிருந்து ஒரு சிலரைப் பிரித்தெடுத்து அவர்கள் மூலமாகச் சில சலுகைகளைக் காட்டி மயக்கப் பார்ப்பது ஏகாதிபத்தியங்கள் கையாளும் ஒரு தந்திரமாகும். இந்தத் தந்திர வழியைத்தான் தமிழ் காங்கிரஸ் மூலம் சிங்கள ஏகாதிபத்தியம் கையாளப் பார்க்கிறது!

சமஷ்டியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டால் சலுகை பல பெறலாம் என்று தமிழ் காங்கிரசு பிரச்சாரம் செய்கிறது. 1956 க்கு முன்பு தமிழர்களைத் தமிழ் காங்கிரஸ் தலைமை தாங்கி நடத்திச் சென்ற காலத்தில் பெற்றுத் தந்த "சலுகைகளை" மக்கள் மறந்துவிட்டார்களா என்ன?

10 இலட்சம் மலை நாட்டுத் தமிழர்கள் அரசியலுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டது

—முதலாவது 'சலுகை'

தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான கிழக்கு மாகாணத்தில் பல்லாயிரக் கணக்கான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு தமிழ் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது

—இரண்டாவது சலுகை!

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு நுழைவாயில் தயாரிக்கப்பட்டது

—மூன்ருவது சலுகை!

சிங்கள ஆட்சியுடன் ஒத்துழைத்து தமிழ காங்கிரஸ் முன்பு பெற்றுத் தந்த

சகித்துக்கொண்டு சிங்கள ஏகாதிபத்தியம் விரும்பிப்போடும் எலும்புத் துண்டுடன் திருப்தியடையவேண்டும் என்பதுதான் தமிழ் காங்கிரஸ் தமிழர்களுக்கு காட்டும் 'சலுகை' வழி!

எத்தனையாண்டுகளானுலும் ஒற்றையாட்சியரசியலமைப்பினை மாற்றியமைத்து இணைப்பாட்சித்திட்டத்தின் கீழ் தமிழ்ப் பகுதிக்கு சுயாட்சியினை [illegible]த்திட உழைத்திடவேண்டும்! உழைத்திடுவோம்! இந்த இலட்சியத்திலிருந்து எத்தனை கேடுகள் சூழினும் துன்பங்கள் துளைக்கினும்- எத்தனை ஆண்டுகள் சென்றிடினும் இம்மியும் வழுவோம்; எடுத்த காரியத்தினை தொடுத்து முடித்திடுவோம்; சிங்கள மக்களுடன் சம உரிமையுடன் வாழ்ந்திடுவோம்; என்பது தான் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுக்கு காட்டும் உரிமை வழி!

தன்மானத் தமிழினம் பின்பற்ற விரும்புவது உரிமை வழியா சலுகை வழியா என்பதை அடுத்த தேர்தலில் எடுத்துக் காட்டிடவேண்டும்! உரிமை வழியையே தமிழினம் ஆதரித்திடும் என்பதில் ஐயம்தான் ஏது?

தோழா, குமாரசாமி என்பவரை ஞாபகம் இருக்கிறதா உனக்கு! 'என்னைத் தோற்கடிக்க எனக்கு ஒரு மகன் பிறந்து வந்தால்தான் முடியும்' என்று ஒருகாலத்தில் வீராப்பு பேசியவர்; 1956ம் ஆண்டு நம்முடைய வி. என். நவரத்தினத்தால் சாவகச்சேரியில் வாங்கிய அடிக்குப்பின் இன்னும் அரசியலில் தலைநிமிர்த்தமுடியாது தவிப்பவர், தனது கட்சித் தலைவரான பொன்னம்பலம்-அமைச்சரவையிலிருந்து கொத்தலாவலையால் உதைத்துத் தள்ளப்பட்ட பின்னரும் அரை மந்திரிப் பதவியில் ஒட்டிக்கொண்டிருந்தவர். வாலறுந்த நரியென பொன்னம்பலத்தைக் கேலி பேசியவர். இன்று அறுந்தவாலை

"தமிழ்ப்பகுதியில் ஏது வளம்? வரண்ட பிரதேசம் ஆயிற்றே இது—இங்கு தேயிலை, றப்பர்கூட உண்டாகாதே! தென்னிலங்கையையும் அரசாங்க உத்தியோகத்தையும் நம்பித்தான் தமிழர்கள் என்றென்றும் வாழவேண்டியிருக்கிறது—இந்நிலையில் சமஷ்டியாம்; தமிழரசாம்! பொருளாதார வளமின்றி சமஷ்டி வாழுமா? சரிவருமா" —என்றெல்லாம் கேலி பேசித்திரிபவர் குமாரசாமியின் குருநாதரான பொன்னம்பலம்தான்! எனவே தமிழ்ப்பகுதியின் வளத்தைப் பற்றி பொன்னம்பலத்துக்கு குமாரசாமி அறிவுரை வழங்கட்டும் தாராளமாக!

ஆனல் குமாரசாமியார் குறிப்பிட்டிருக்கும் ஒரு விஷயத்தைத்தான் நண்பா நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்—

தமிழ்ப் பகுதியின் தேவைகள் எதற்கும் மத்திய அரசாங்கத்தினையே எதிர்பார்த்திருக்கவேண்டியிருக்கிறது — என்ற உண்மையை அவரையறியாமலே திரு. குமாரசாமியார் சுட்டிக்காட்டியிருக்கிருர்!

எதற்கும் மத்திய அரசாங்கத்தினை எதிர்பார்த்திருக்கும் இழிநிலை ஏற்பட்டிருப்பதற்கு காரணம் என்ன என்பதை குமாரசாமி சிந்தித்துப்பார்த்திருக்கமாட்டார்! நாம் இதைச் சிந்தித்துப்பார்த்திருக்கிரும்!

எதற்கும் மத்திய ஆட்சியின் கையை எதிர்பார்ததிருக்கவேண்டிய நிலையேற்பட்டிருப்பதற்கு காரணம் — இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்பாகும். ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரம் முழுவதும் மத்தியில் குவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றியமைத்து—மத்திய ஆட்

(9ம் பக்கம் பார்க்க)

## அரசியல் மடல்

ன் வீணுகச் சமஷ்டிக் கோரிக்
டிவாதமாக இருக்கிறீர்கள்?
விட்டு விடுங்கள்; உங்களுக்கு
லுகைகள் தருகிறேம் என்று
டியது சிங்கள ஆட்சி! ஆனல்
காடுத்திடவில்லை நமது கட்சி!

கட்சிகளும், இந்நாட்டுத்
சமஷ்டிக் கோரிக்கையை
கள்; விட்டு விட்டால் உங்
ங்களுடன் அணைத்துக்
ேரும்; என்று நயத்துடன்
த்தன. கண்ணிரண்டும் விற்
வாங்கும் கபோதிகளல்லர்
கூறிவிட்டனர் நமது தங்கத்

தா[illegible] ந[illegible] [illegible]சிங்கள மக்
பவினையும் ந[illegible]லண்ணத்தை
வாழும் தமிழ் காங்கிரஸ் கட்
ருட்டி—தமிழ் காங்கிரஸ் மூல
ழரசுக்கட்சியை அடுத்த தேர்
யடித்து—சமஷ்டிக் குரலை நசுக்
சிங்கள இனவெறியர்களும்,
கட்சிகளும், இந்நாட்டுத் தின
ம் திட்டமிட்டு வேலை செய்யத்
யுள்ளன!

# ங்கள ஏகாதிபத்தியத்தின்
# கைக்கூலிகளுக்கு
# செந்தமிழர் பூமியில்
# இடந்தரலாமா?

## படை கிளம்பப் பாடல் படை!

என்னகவி எழுதுகிறீர்......?
பாவலரே...... பேரலிகளாய்
இருக்கின்றீர்கள்!
கன்னியெழிற் றமிழணங்கு
கையிரண்டில் விலங்குடையாள்
கண்ணீர் கண்டும்
செந்நெருப்பு விழிகொண்டு
சீறியெழ மறந்துவிட்டீர்...!
சீச்சீ...... வானில்
புண்ணிருந்தாற் போலிருக்கும்
நிலாவினையும் காதலையும்
புனைகின்றீரே!

பொங்குவெறித் தமிழ்கொண்டு
போர்க்களத்தே அவ்வையெனும்
பூவை அந்நாள்
செங்குருதி குளித்திருந்த
தமிழ்மன்னர் சிறப்பெல்லாம்
கவிதை ஆக்கிச்
சங்கமணித் தமிழ்தந்தாள்......
அட... நீங்கள் தாய்த்தமிழை
மறந்து நாட்டில்
தெங்கிளநீர் முலைபாடித்
[illegible]கின்றீர்களா?
[illegible]பொருள்!

ஊர்பற்றி மொழிபற்றி
ஒருபொழுதேனும் நீவிர்
உணர்கின்றீரா?
தீபற்றி எரிகின்ற
வீட்டினிலே இசைபாடிச்
சிரிக்கின்றீர்கள்!
வாய்பற்றி எரியாதா?
தமிழன்னை மனம்நொந்து
வயிறெரிந்தால்
நீர்பற்றும் எழுத்தாணி
நொறுங்காதா? விளையாடல்
நிறுத்து மின்கள்!

சொல்லடுக்கிச் சொல்லடுக்கிச்
சோடித்த கவிதையெல்லாம்
போதும்...! மாற்ருர்
பல்லுடைத்து நமக்குற்ற
பழிதுடைக்க நாலுகவி
படைப்பீர்! ஓடி...
வில்லெடுத்து வேலெடுத்துத்
தமிழ்இளைஞர் வெளிக்கிளம்ப
நெருப்பு வீசும்
சொல்லெடுப்பீர்...! பாவலரே
இல்லையெனில் தொழில்விடுங்கள்...
அதுவும் நன்றே!

(கவிஞர் காசி ஆனந்தன் கவிதை தொகுப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலினால் அல்ல....!

மணியம்

காால்கள் நடந்தன. எண்ணங்கள் முன்பே செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்று விட்டன. மனம், விரைவாகச் செல்லும்படி கால்களுக்குக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தது.

ஏன்? எதற்காக? இத்தனை அவசரம்?

பல வருடங்களாகத் என் மனதில் தேக்கி வைத்திருந்த ஒரு கேள்விக்கு இன்று பதில் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறாள் அவள். அவள்தான் கலா.

கலாமோகினி என்ற தன் பெயரை வெட்டிக் குறுக்கி 'கலா' வென்றே தன்னை அழைக்கும்படி அவள் விடுத்த அன்புக் கட்டளை அது.

கலாவிற்கு அப்போது பத்து வயது. ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாணவி அன்று ஜீ. சி. ஈ. பரீட்சை எழுதும்வரை அவளின் 'டியூஷன்' மாஸ்டராகப் பணி புரிந்தவன் நான்தான். வயதுச் சிறுமி பக்கத்தில் இருக்க, நான் அருகிருந்து பாடம் சொல்லிக் கொடுக்கும் வேளையில், அவளின் ஈரும் பேனும் உறவாடும், பிசான் பிடித்த தலையிலிருந்து கிளம்பும் நெடிலை அனுபவித்து மனம் அருக்களித்த நாட்களையும், இன்று பூவும் பொட்டும் சூடி பொலிவுற்றிருக்கும், நாட்களையும் நான் எண்ணிப் பார்க்கின்றேன். எதிரும்புதிருமாக இன்று இருந்து பாடம் படிக்கும் அவள், பக்கத்தில் இருக்க மாட்டாளா என்ற நப்பாசையில் மனம் துடிக்காமலில்லை. ஆனால் பருவம் அணை போட்டபோதும் அந்த புன்னகைச் செல்வியின் விழிவிருந்து நிறையக் கிடைத்தது.

காலம் ஒரு விசித்திரப் பிறவி—அது செய்யும் வேலைகள் பிரமாதம், அற்புதம், என்றே சொல்லலாம். ஒரு கணம் வெறுக்கப்பட்ட அதே பொருள் மறுகணம் விரும்பப்படுவது காலத்தின் கோலமல்லவா? அதிலிருந்து எவரும் தப்ப முடியாது. தப்பியதுமில்லை.

கால ஓட்டத்தில் எம் இருவரினதும் மனத் திரையில் ஏதோ ஒன்று படர்ந்து வளர்ந்தது. இனம் புரியாத அந்த வளர்ச்சி, இருவரையும் என்னவோ செய்தது. ஒருவரை ஒருவர் நோக்குங்கால் ஏதோ சொல்லமுயல்வதுபோலிருக்கும். ஆனால்...பதில் வராது.

படர்ந்து செடி பூத்துக் காய்த்த பின்பும், இது இன்ன செடிதான் என்று கண்டு பிடிப்பது பெரிய காரியமில்லை.

இப்படி வளர்ந்த எங்கள் 'காதல்' தன் சுயரூபத்தைக் காட்ட அந்தப் பிரயாணம் ஒரு சந்தர்ப்பமாயிருந்தது.

அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பதுபோல தோன்றினும், எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. காரணம் நானோ ஏழை. அவளோ பணக்காரி. காதல்தான் வெற்றி பெற்றாலும் கல்யாணம் நடைபெறுமா? அந்த வாழ்வுதான் சுகப்படுமா? இது என் மனதில் எழுந்து மடிந்த கேள்விக் கணைகள்.

என்றாலும், அந்தச் சந்தர்ப்பங்களை நான் விரயமாக்க விரும்பவில்லை.

கலா, அவள் தந்தையுடன் கதிர்காமம் செல்லும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. என்னையும் வரும்படி அழைத்தாள், கலா. என்னைக் காதலிப்பவன் எனக் கருதுபவள் அழைக்கும் போது.....பால் குடிக்கப் பரிசா வேண்டும்?

அவள் எண்ணத்தின் பிரதிபலிப்பு ரெயில் பிரயாணத்தில் வெளிச்சமாகியது. ரெயிலில் ஒருவர் அவள் பக்கத்தில் இருக்கவரும்

எமது சிறுகதை

பொழுது... அந்தப் பாக்கியத்தை அவள் தந்தையே எனக்களித்தார். ரெயிலுக்கு உரியில்லை — உணர்வில்லை — உண்மைதான் என்றாலும் எங்கள் நிலைபுரிந்துதான் இருந்தது போலும். ஆடி அசைந்து எங்களுக்கு இதமான வகையில் இருவரையும் அணைத்தது, இருவர் உடலையும் உராசி—மெய்சிலிர்க்க வைத்தது.

ஒரு முறை அது செய்த வேலையைப் பாருங்களேன். குலுக்கிய குலுக்கலில் அவள் குப்புறவிழப் போனாள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவள் 'ஐயோ! அப்பா' என அவள் தந்தைக்கு ஒரு குரல் கொடுத்துக் கொண்டு, என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள், அந்தத் தழுவலில் ஏற்பட்ட அழுத்தம்...... தற்செயலாக ஏற்பட்டது என்று சொல்லமுடியாது. அவள் எண்ணத்தை அது கொட்டித் தூவியது.

பெண்கள் எரிமலைக்கு ஒப்பானவர்கள். அக்கினிப் பிழம்பாகட்—பொங்கிப் பிரவகிக்கும் எரிமலை தருணம் வரும்போது, வெடித்துச் சிதறிவிடும். பெண்களின் இதயத்தில் தேங்கிக் கிடக்கும் எண்ணப் பூக்கள், சந்தர்ப்பம் வரும்போது, பூத்துச் சிலிர்க்கின்றன.

அதையே அவளும் செய்தாள். இன்பியல் நாடகத்தின் ஒரு காட்சி முடிந்தது.

அவளுடைய சொந்தக்காரர் ஒருவரின் வீட்டில் தங்குவதாகமுடிவு செய்து அங்கிருந்துதான் கதிர்காமம் புறப்பட்டோம்; கதிர்காமத்தில் அன்றிரவு பூசைகள் நடந்து முடிந்தன.

விபூதி, பிரசாதத்தைப் பெற்ற அவள், வெளி வந்தபோது என் நெற்றியில் பொட்டிடவும், பிரசாதத்தை ஊட்டவும் தவறவில்லை. நன்றியைக் காட்டவும், அவள் எண்ணத்திற்குப் பதிலாகவும், என் கையில் இருந்த மலரை அவள் தலையில் வைத்தபோது'... அவள் பார்த்த அந்தப் பார்வை...ஊழுழி காலமும் நான் உனக்கு, அடிமை என்பது போலிருந்தது. கூட்டத்தோடு கூட்டமாக, மக்கள் வெள்ளத்தில் யானை திருஉலாக்காட்சியை எல்லோரும் ரசித்த அவ்வேளை... அவள் இடையை வளைத்துக் கொண்டேன்; அதில் சுகம் கண்ட அவள், அதை இதமாக்கிக் கொண்டாள்.

அங்கு தங்கிய நாட்களில், மாலையில் கடற்கரை சென்று உலாவி வருவோம். ஒருமுறை என்னை அழைத்த போது நான் செல்ல மறுத்து விட்டேன்.

'ஆயிரம் மனத்தாங்கல் இருக்கலாம். வீட்டிற்குச் சென்று பேசித் தீர்த்துக் கொள்ளுவோம். இப்போ கிடைத்த சந்தர்ப்பத்தை ஏன் வீணாக்குகிறீர்கள்' என்று அவள் கூறிய பின்பு எனக்கு அங்கிருக்க நியாயமில்லை. புறப்பட்டேன். அன்று ஒரு நெஞ்சுருக்கும் நிகழ்ச்சி. கடற்கரையில் உலாவும்போது, சற்று உள்ளே சென்ற நான் திரும்பு முன், அலை என்னை அடித்து வீழ்த்தியது. அப்போது, அவள் கொடுத்த அந்த அபயக்குரல் சும்மா கொடுத்த குரல் அல்ல.

உங்களுக்கு எல்லாம் விளையாட்டு, என் நெஞ்சு விறைத்து விட்டதப்பா?' இப்படி செல்லமாகக் கண்டித்தபோது அதில் ஓர் உரிமை இழை ஓடியதை என்னால் அவதானிக்க முடிந்தது.

இவ்வளவு உரிமை கொண்டாடிய பின்பும் 'அவள் உண்மையில் என்னைக் காதலிக்கிறாளா'? இந்தக் கேள்வி எழுந்தது எழுந்ததுதான். இன்னும் பதில் இல்லை.

பலவித செய்கைகள் மூலம் அவள் என்னைக் காதலிக்கிறாள் என அறிந்தும், அதை அவள் வாயாலேயே சொல்ல வேண்டும் என என் மனம் அடம்பிடித்தது.

டியூஷன் வகுப்பு. இடையில் எங்கள் நாடகம். அதில் ஒரு சந்தர்ப்பதைப் பயன்படுத்தி, 'நீ என்னைக் காதலிக்கிறாயா?' கேட்டேன். எதிர்பாராத கேள்விதான் அவளுக்கும். மயக்கப் பொடி தூவிய ஓர்—மர்மப்புன்னகை அவள் இதழ்களில் நெளிந்தது.

நிமிடங்கள், ஒன்று இரண்டு...ஓடிக் கொண்டிருந்தது. திடீரென 'இல்லை' என்றால், அதைத் தாங்கும் சக்தி எனக்கு அன்று இருக்கவில்லை. ஒரு ஆடவன் எதையும் தாங்கிக் கொள்வான், ஆனால் தன்னைக் காதலிப்பவள் எனக்கருதுபவள் அதை நேரில் மறுப்பாளானால் அதன் தாக்கம் அவனை என்னென்னவோ செய்துவிடும். அதைத் தவிர்க்கும் நோக்கத்தினால் காலத்தின் துணையை நாடினேன். ஒரு நாள் கழித்து அந்தப் பதில் வருமானால் ஒருவாறு சமாளித்துக்கொள்ளலாம் போல் எனக்குத் தோன்றியது.

என்றாலும் இது வரை காலம்—பத்து வருடங்களாக அவளுடன் ஆடிப்பாடிய கால நிகழ்ச்சிகளின் நிழல் என் மனதில் நீண்டு வளர்ந்தது.

நீர் சிந்தித்து நாளை பதில் தாரும்! என்றதுடன் அதற்கு முற்றுப் புள்ளி வைத்தேன்.

இன்று அந்தப் பதிலை அறிவான் வேண்டித்தான் கால்கள் இத்தனை வேகமாக விரைகின்றன.

பதில் தயாரா? என்பதற்குள், தன் மார்புச் சட்டைக்குள் கையை விட்டு ஒரு கடிதத்தைத் தந்தாள். அதைப் பெற்றுக் கொண்டேன்.

நான் தங்கியிருக்கும் அறையின் லைட் நீளமானது. ஆனால் ஆழமானதல்ல!

'நான் உங்களுடன் நடந்து கொண்டவை அத்தனையையும் மறுக்கவில்லை; உண்மை. எனக்குத்தேவையான காலத்தில் தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டேன். இதுவரை காலமும் நடந்தவை அத்தனையும் காதலினாலல்ல...? விரும்பினால் தொடரலாம்......'

இதற்குமேல் கடிதத்தைப் படிப்பதில் பயனில்லை என்று கண்ட நான் அதை சுக்குநூறாகக் கிழித்து வீசினேன்.

(யாவும் கற்பனை)

## 272 வது சுவீப் முடிவுகள்

இம்மாதம் 6ந் திகதி வியாழக்கிழமை களிகமுவ மாவித்தியாலயத்தில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 272 வது சுவீப் முடிவுகள் வருமாறு:—

முதல் பரிசு—
ரூபா 100,000
04 B 0347


2 வது பரிசு—
ரூபா 40, 000
35 O 0587

3 வது பரிசு—
ரூபா 10, 000
26 D 0495

பரூா 566 சதமும் 50 வீதம் பெறும் 100 ஆறுதல் பரிசுக்குரிய டிக்கட் இலக்கங்களும் வருமாறு:—

| | |
|---|---|
| 37 A 0152 | 18 M 0654 |
| 08 A 0664 | 15 M 0187 |
| 16 A 0458 | 27 M 0893 |
| 21 A 0722 | 38 M 0848 |
| 09 A 0785 | 09 M 0770 |
| 17 B 0286 | 33 N 0670 |
| 18 B 0140 | 14 N 0508 |
| 30 B 0336 | 22 O 0938 |
| 09 B 0221 | 08 O 0376 |
| 31 B 0105 | 09 O 0081 |
| 19 C 0494 | 14 P 0791 |
| 08 C 0873 | 42 P 0454 |
| 06 C 0966 | 34 P 0059 |
| 04 C 0933 | 21 P 0924 |
| 33 C 0578 | 36 Q 0181 |
| 04 C 0939 | 42 Q 0479 |
| 17 D 0936 | 04 R 0077 |
| 25 D 0561 | 37 R 0622 |
| 11 E 0297 | 43 R 0369 |
| 01 F 0454 | 20 S 0411 |
| 23 F 0375 | 41 S 0293 |
| 19 F 0763 | 11 S 0262 |
| 22 F 0494 | 34 S 0963 |
| 21 F 0726 | 32 T 0753 |
| 34 F 0134 | 23 T 0245 |
| 32 F 0526 | 09 T 0504 |
| 33 F 0069 | 24 U 0092 |
| 36 G 0085 | 40 U 0276 |
| 24 G 0580 | 22 U 0013 |
| 36 G 0248 | 27 U 0797 |
| 31 G 0446 | 21 U 0814 |
| 09 G 0488 | 07 U 0997 |
| 22 G 0040 | 31 U 0025 |
| 41 G 0061 | 14 V 0087 |
| 32 H 0767 | 23 V 0387 |
| 37 H 0475 | 30 V 0266 |
| 22 H 0933 | 34 W 0859 |
| 03 H 0338 | 05 W 0297 |
| 19 H 0864 | 14 W 0503 |
| 07 H 0690 | 43 W 0561 |
| 01 J 0708 | 23 X 0483 |
| 13 J 0189 | 29 X 0715 |
| 30 J 0002 | 38 X 0962 |
| 18 J 0737 | 36 Y 0549 |
| 35 J 0014 | 21 Y 0361 |
| 26 K 0771 | 15 Z 0292 |
| 25 K 0853 | 22 Z 0224 |
| 07 K 0179 | 02 Z 0731 |
| 42 L 0438 | 36 Z 0079 |
| 33 L 0780 | 47 Z 0835 |


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி, கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள இன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து நிறுத்த ஏரிக்கரை ஏடுகளும் வரிந்து கட்டி வேலை செய்து வருகின்றன. கருணாநிதி வருகை இலங்கையில் சிங்கள மக்களிடையே ஐயத்தையும் அச்சத்தையும் வளர்க்கவே துணைபுரியும் என்று 'டெயிலி நியூஸ்' தீட்டியுள்ள ஒரு தலையங்கத்தில் கூறியுள்ளது. அதன் சகோதர ஏடான 'தினமின'வும் இப்பிரச்சினையில் துவேஷத்தைக் கக்கியுள்ளது.

ஆளுங் கட்சியின் ஊது குழல் என்று வர்ணிக்கப்படும் 'டெயிலிநியூஸ்' இது சம்பந்தமாக நவம்பர் 17ந் திகதி தீட்டியுள்ள தலையங்கத்தில் கூறியுள்ளதாவது:—

'சனவரியில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு தி. மு. க. தலைவர் திரு. முத்துவேலு கருணாநிதி போட்டுள்ள உத்தேசத் திட்டம் புத்தி பூர்வமானதாகக் காணப்படவில்லை.

'அடுத்த வீட்டுக்காரனுக்கு பிரச்சினையை கொடுப்பவன் நல்ல அயல் வீட்டானாக முடியாது. தமிழ் நாடு முதலமைச்சருக்கு தாம் இங்கு வருவது அரசியல் ரீதியில் பல சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதை உணர முடியாவிட்டால், அவர் வெள்ளை உள்ளம் படைத்தவராகவேயிருக்கவேண்டும்!

''இலங்கைத் தி. மு. க. வுக்கும் தமிழ் நாட்டு தி. மு. க. வுக்கும் அரசியல் ரீதியில் எவ்வித தொடர்பும் கிடையாது என திரு. கருணாநிதி பல தடவை மறுத்துள்ளார். திரு. கருணாநிதியின் இலங்கை விஜயத்தினால் அவரது இந்த உறுதிமொழியைக் கூட இலங்கையர்கள் (சிங்களவர்கள்) சந்தேகக் கண் கொண்டு பார்க்க நேரிடலாம்! அதுவும் பொதுத் தேர்தல் சமயத்தில் அவர் இங்கு வரத் திட்டமிட்டிருப்பது அவரது வருகையின் பின்னால் ஏதோ ஓர் சூழ்ச்சி புதைந்து கிடப்பதாகவும் கருதப்பட இடமளிக்கிறது.

இந்தியத் தி. மு. க. 'வினர் கலாசார தொடர்பு பற்றிப் பேசுவதனால், யாருடைய தப்பபிப்பிராயங்களையும் அதுபோக்கிவிடாது. உலகில் அரசியல் சார்பான இயக்கங்களுக்கு எல்லாம் கலாசாரப் பூச்சே இன்று பூசப்படுகிறது.

''தி. மு. க. தலைவருக்கு அழைப்பு விடுத்துள்ளதாகக் கூறப்படும் தமிழ் மன்றங்கள் முதலில் அடையாளம் கண்டு பிடிக்கப்படவேண்டும்.

''தி. மு. க. தலைவரின் இலங்கை விஜயம் பற்றி இங்கு அதிக ஆர்வம் காட்டப்படுகிறது. இதுதான் பாக்கு நீரிணையின் இருபக்கங்களிலும் இருக்கும் மக்களை ஆலோசனையிலீடுபடும்படி தூண்டுகிறது!

### தமிழக முதல்வரின் கருத்து

தமிழக முதன் மந்திரி திரு. மு. கருணாநிதி தாம் ஜனவரியில் இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்திருப்பதாக இலங்கைப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைப் பற்றியும் சந்தர்ப்பச் சூழ்நிலை சரியில்லை என அதையொட்டி எழுப்பப்படும் அச்சம் குறித்தும் நிருபர்களிடம் பின்வருமாறு கூறியுள்ளார்.

'அடுத்த வருடம் இலங்கையில் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதனால் எனது விஜயத்தை சிலர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவரென்ற ஒரு அச்சம் அங்கு எழுந்துள்ளதென்றால், அதேபோல் நான் அங்கு விஜயம் செய்வதற்கு எதிராக எழுப்பப்படும் எந்த ஆட்சேபத்தையும் சிலர் பொதுத்தேர்தலில் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளகூடுமல்லவா;

## தான்தோன்றி ...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற தேர்தலின்போது தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிய திரு. சிவசுந்தரமே கிளிநொச்சி காங்கிரஸ் வேட்பாளர் எனத் திரு. பொன்னம்பலம் அறிவித்ததும், இவர் செய்த திருக்கூத்தை மக்கள் மறந்து விட்டார்களா? பொன்னம்பலத்தைத் திட்டுவதற்கே ஒரு கூட்டம்போட்டாரே! அரசியல் ரோசநரம்பற்ற பொன்னம்பலம் மறந்துவிடலாம்; கிளிநொச்சி மக்களுமா மறந்து விட்டார்கள்? அடுத்த கிழமை காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டாரே. இதுதானா அவர் காட்டும் கட்சிப் பற்று? பஞ்சதந்திரம் கூறும் மித்திர துரோகத்தை செயல் முறையில் காட்டிய வீரர் இவர். சென்ற முறை போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் சிவானந்தனின் சம்மதமின்றி, அவரது எண்ணத்தையே அறியாதுதான் சாவகச்சேரித் தொகுதியில் நிற்கப்போவதாக அறிவித்தாரே! இவர்தான் போகட்டும். இவரது தலைவரும் சேர்ந்து திரு. சிவானந்தத்தின் கழுத்தை அறுக்கின்றாரே. இவர்களுக்கேது பண்பாடு?

பண்பாடு கிஞ்சித்தேனுமிருந்தால் தமிழர்களின் கழுத்தை யறுப்பார்களா? போலிக் கையெழுத்து வேட்டையினால் சிவானந்தத்தின் அரசியல் வாழ்க்கைக்கே முற்றுப் புள்ளி வைத்து விட்டனர். இக் கழுத்தறுப்பின் மர்மந்தான் என்ன?

தனது சுயநல முன்னேற்றத்திற்காக எதையும் செய்யத் துணியும் இவருக்கா அரசியல் வாழ்க்கை? இவருக்கா தமிழ்ப் பற்று?

சாவகச்சேரித் தொகுதியில் அரசியல் தேர்த் திருவிழா இப்பொழுதே தொடங்கி விட்டது. தேர் இழுக்கின்றார்கள். தேர் எவ்விடத்தைச் சென்றடையும் என்று மக்களுக்கு நன்றாகத் தெரியும். இவரது அரசியல் வாழ்க்கையையும் தீர்மானித்துக் கொண்ட சாவகச்சேரி மக்கள் பாடும் கவிதையும் இதோ காதில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றது.

''நந்தவனத்திலோராண்டி
—அவன்
நாலாறு மாதமாய் குயவனை
வேண்டி
கொண்டு வந்தானொரு
தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத் தாண்டி''

## 273வது சுவீப் முடிவுகள்

இம்மாதம் 20ந்திகதி வியாழக்கிழமை கொள்ளுப்பிட்டியில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 273 வது சுவீப் முடிவுகள் வருமாறு:—

முதல் பரிசு—
ரூபா 91,540
24 S 0626

2 வது பரிசு—
ரூபா 36,616
07 N 0090

3 வது பரிசு—
ரூபா 9,154
29 D 0895

ரூபா 457 சதம் 70 வீதம் பெறும் 100 ஆறுதல் பரிசுக்குரிய டிக்கட் இலக்கங்களும் வருமாறு:—

| | |
|---|---|
| 02 A 0654 | 02 O 0187 |
| 21 A 0967 | 13 O 0412 |
| 06 B 0896 | 32 P 0168 |
| 12 B 0160 | 12 P 0635 |
| 37 B 0378 | 37 P 0613 |
| 17 B 0155 | 09 Q 0177 |
| 35 B 0944 | 04 Q 0699 |
| 25 B 0098 | 05 R 0337 |
| 27 C 0278 | 06 R 0585 |
| 18 C 0496 | 02 R 0096 |
| 31 C 0797 | 18 R 0350 |
| 30 C 0903 | 24 S 0503 |
| 33 D 0399 | 23 S 0273 |
| 21 D 0540 | 22 S 0610 |
| 08 D 0199 | 31 S 0232 |
| 27 D 0642 | 22 T 0891 |
| 27 D 0833 | 21 T 0523 |
| 21 D 0081 | 12 T 0490 |
| 35 E 0104 | 10 T 0286 |
| 07 E 0071 | 19 U 0445 |
| 14 E 0554 | 12 U 0175 |
| 19 F 0950 | 18 U 0215 |
| 04 F 0966 | 01 V 0260 |
| 25 F 0530 | 07 V 0310 |
| 37 F 0342 | 28 W 0338 |
| 17 G 0517 | 11 W 0697 |
| 08 G 0452 | 08 W 0459 |
| 12 H 0860 | 11 W 0050 |
| 37 J 0209 | 20 W 0126 |
| 37 J 0747 | 31 X 0646 |
| 21 J 0206 | 32 X 0702 |
| 26 J 0863 | 32 X 0113 |
| 36 K 0918 | 15 X 0678 |
| 16 K 0212 | 37 X 0620 |
| 02 K 0407 | 15 X 0531 |
| 37 K 0136 | 08 X 0163 |
| 19 K 0998 | 08 X 0649 |
| 32 L 0277 | 17 X 0192 |
| 27 L 0489 | 35 Y 0659 |
| 10 L 0319 | 02 Y 0132 |
| 09 L 0137 | 18 Y 0888 |
| 18 M 0278 | 29 Y 0739 |
| 06 M 0943 | 18 Y 0637 |
| 05 M 0728 | 22 Z 0463 |
| 11 N 0748 | 05 Z 0931 |
| 09 N 0376 | 15 Z 0754 |
| 23 O 0638 | 13 Z 0386 |
| 01 O 0988 | 30 Z 0832 |
| 04 O 0534 | 04 Z 0754 |
| 20 O 0222 | 31 Z 0163 |

தேசிய லொத்தர் சபையால் உறுதிப் படுத்தப்படவேண்டியவை;

# தேசிய செல்வம்

(ஜாதிகசம்பத)

# சுவீப் முடிவுகள்!

15—11—69 சனிக்கிழமை இழுக்கப்பட்ட 9 வது 'தேசிய செல்வம்' சுவீப் முடிவுகளின் விபரம் வருமாறு:—

### 1 ம் பரிசு

ஒன்றரை இலட்சம் ரூபா
12 Z 000166

### 2 ம் பரிசு

ஒன்றே கால் லட்சம் ரூபா
05 G 001993

### 3 ம் பரிசு

ஒரு இலட்சம் ரூபா
01 N 000419

ஆறுதல் பரிசு பெறும் 200 சுவீப் இலக்கங்கள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 16 P 000690 | 04 L 001648 | 05 N 001822 |
| 16 Q 000373 | 14 K 000314 | 01 N 001739 |
| 11 S 000540 | 11 K 000879 | 12 D 001070 |
| 12 K 000281 | 07 W 001141 | 10 D 001417 |
| 12 A 001000 | 06 P 000594 | 05 Q 001459 |
| 10 L 001031 | 12 O 000679 | 06 B 000906 |
| 11 Y 000549 | 14 U 001085 | 01 C 001784 |
| 08 B 001997 | 09 E 000818 | 03 T 000955 |
| 15 Z 000928 | 02 O 001206 | 06 O 000291 |
| 04 J 001348 | 16 M 001292 | 10 P 001795 |
| 05 E 000902 | 03 Y 000243 | 14 Q 000639 |
| 12 K 001113 | 06 N 000089 | 10 A 000959 |
| 05 S 000315 | 12 A 001882 | 07 P 000836 |
| 15 S 001659 | 04 E 000950 | 09 O 001093 |
| 13 D 001287 | 05 B 001452 | 11 G 000495 |
| 14 H 001891 | 06 Z 001672 | 16 B 001141 |
| 03 S 001921 | 04 A 000937 | 09 S 000300 |
| 08 Z 001205 | 10 Z 001372 | 14 R 000527 |
| 04 G 000650 | 01 J 001463 | 01 E 001858 |
| 02 D 000180 | 17 M 000431 | 12 P 001864 |
| 13 T 001510 | 06 P 000053 | 02 R 000802 |
| 13 G 001316 | 15 T 001549 | 02 V 000918 |
| 01 K 000695 | 02 E 001681 | 04 F 001296 |
| 04 Z 001209 | 13 U 001997 | 05 H 000583 |
| 08 C 001670 | 01 Q 001041 | 16 V 001147 |
| 06 O 001098 | 13 R 001569 | 13 D 001606 |
| 10 T 001487 | 07 S 000510 | 01 R 001229 |
| 16 H 001218 | 13 X 000650 | 10 L 000738 |
| 02 L 000827 | 15 K 001333 | 08 O 001570 |
| 04 W 000530 | 07 D 000013 | 04 M 000533 |
| 02 H 000123 | 07 A 001244 | 16 U 001431 |
| 03 F 000949 | 09 Y 000757 | 03 V 001846 |
| 02 E 000514 | 01 R 000363 | 08 C 000082 |
| 10 O 001690 | 05 B 001986 | 13 H 000099 |
| 10 F 001981 | 01 C 000331 | 17 P 000627 |
| .0 C 001100 | 17 K 000879 | 07 A 000868 |
| 14 C 000942 | 14 T 000171 | 12 H 001639 |
| 07 E 001308 | 13 B 001680 | 02 Q 001322 |
| 15 Y 000119 | 07 R 001035 | 15 H 001659 |
| 14 Y 001208 | 06 K 000150 | 14 W 000772 |
| 07 P 000698 | 08 X 000008 | 14 Z 000338 |
| 03 Y 000923 | 09 E 000345 | 06 L 001189 |
| 16 B 000942 | 02 E 001287 | 15 Z 001284 |
| 07 M 000208 | 08 D 001570 | 02 R 001352 |
| 12 J 001054 | 04 M 000533 | 01 P 000172 |
| 02 B 000205 | 16 U 001431 | 05 O 001915 |
| 06 G 000324 | 03 V 001846 | 06 M 000915 |
| 16 L 000516 | 08 C 000082 | 06 B 000486 |
| 16 Q 001157 | 13 H 000099 | 04 U 001431 |
| 04 R 000777 | 17 P 000627 | 08 L 001065 |
| 09 T 001644 | 07 A 000868 | 10 N 000506 |
| 02 Q 000011 | 12 H 001639 | 03 Q 001417 |
| 12 K 001889 | 02 Q 001322 | 11 S 000851 |
| 10 F 001051 | 15 H 001659 | 08 X 001293 |
| 13 K 000984 | 14 W 000772 | 09 W 000050 |
| 12 R 001411 | 14 Z 000338 | 08 G 000764 |
| 07 Y 000559 | 06 L 001189 | 13 G 001444 |
| 14 A 000937 | 15 Z 001284 | 12 Q 001453 |
| 10 A 000741 | 02 R 001352 | 16 Y 001163 |
| 08 R 001459 | 07 W 001006 | 15 O 000544 |
| 04 Y 000965 | 10 Z 000288 | 02 L 000553 |
| 16 Q 001005 | 12 B 000017 | 13 D 001001 |
| 03 G 000885 | 04 W 000698 | 13 Q 000738 |
| 11 M 001803 | 05 G 000718 | 12 X 001668 |
| 05 P 000640 | 02 V 000681 | 07 O 000776 |
| 16 S 001559 | 02 G 000329 | 17 J 000312 |
| 12 W 000536 | 12 X 001499 | 01 p 001388 |
| 06 A 001044 | 11 X 000032 | 08 N 001334 |
| 05 F 001382 | 01 W 000586 | 01 E 001584 |
| 11 L 000145 | 05 A 000895 | 08 M 000598 |
| 17 H 000531 | 16 X 000219 | 13 X 001259 |
| 04 F 000657 | 17 D 000196 | 06 E 001675 |

## தமிழ் - சிங்கள...

(1ம் பக்கம் தொடர்ச்சி)

கள் சிங்களம் படிக்க மறுப்பதும் சிங்கள மக்களைக் கிளர்ந்தெழச் செய்கின்றன.

''தமிழர்களுக்கு அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்ட பின்னர் அவர்கள் அதிகமாக எதையும் கோராது ஒற்றுமையாக வாழப்பழக வேண்டும்''

—இவ்வாறு தினபதியின் சகோதர ஏடான 'சன்' ஆங்கில ஏடு 18-11-69 ஆசிரியத் தலையங்கத்தில் தமிழர்களுக்கு 'புத்திமதி' கூறியுள்ளது.

## அண்ணா .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் முயற்சியால் நியமிக்கப்பட்டது.

இதில் மேற்படி மன்றத்தின் அரை வாசிப்பகுதி தீக்கிரையாக்கப்பட்டு சாம்பலாகியது. அத்தோடு அங்கிருந்த அண்ணா படம் பத்திரிகைகளும் தீக்கிரையாகின;

இம்மன்றத்தின் நிர்வாகி இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாண்டிருப்புக் கிளையின், தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சமஷ்டியை ....

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

சியின் கையை எதிர்பார்க்காமல் நமது பிரதேசத்தை நாமே ஆளும் அதிகாரத்தை—நமது பிரதேசத்தை நாமே அபிவிருத்தி செய்யும் அதிகாரத்தை—பெறுவதற்கே நாம் சமஷ்டி அரசியலமைப்பு கோருகிறோம்!

[illegible] ன்றும் மத்திய அரசாங்கத்தின் தயவிலேயே தமிழர்கள் 'ஒண்டுக் குடித்தனம்' நடத்தவேண்டுமென்கிறது தமிழ் காங்கிரஸ்!

பயணம் நீண்டதென்றாலும் தமிழினம் தமிழரசுக் கட்சியின் பின்னாலே திரண்டு நின்று தனது உரிமையை என்றோ ஒரு நாள் அடைந்தே தீரும் என்பதிலே அசையாத நம்பிக்கை எனக்குண்டு! அந்த நாளைக்காண ஓயாது பணியாற்றுவோம்.

உன்,
அன்புத் தோழன்,
—'கோவை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தான்தோன்றி" குமாரசாமி

# ஓர் கொள்கைவாதியா?

## அவர் அடித்த குத்துக்கரணங்கள் எத்தனை எத்தனை?

சரஸ்வதி பூங்காவனம்: ஆ கொரு தலைவர். நாடாளுமன்றத்திற்குள் புகுந்துவிட வேண்டுமென்ற தீராத விவாவினல் உந்தப்பட்டு அலவித தந்திரங்களை கையாண்டார். 'பாரீர், மக்கள் மீது இருக்கும் எனது அக்கறையை; வாரீர் எனக்கு ஆதரவு தாரீர்' என அழைத்தார். மக்கள் இவரது தந்திரங்களை, சுயநலத்தில் இருக்கும் அதி தீவிரப்பற்றை அறிந்தவர்கள்; பலமுறை அவரது தந்திர வேண்டுகோள்களை நிராகரித்துவிட்டனர்.

என்றாலும் அவர் சளைக்கவில்லை; இம்முறை இம்மக்கள் ஏமாறமாட்டார்களா என்ற நப்பாசை. மக்கள், தான் செய்த 'மக்கள் சேவையை' மறந்தாவிட்டார்கள் என்ற நினைப்பில் 'மீண்டும் உலா வருவேன். என்னைக்காணத் தவறாதீர்கள்' என்று அறிவித்துவிட்டார்.

தமிழை மறந்து, தமிழர்களின் நலனை மறந்து; தமிழர் சமுதாயத்தின் உயர்வை மறந்து; தனது உயர்விலும் தனது நலனிலும் அக்கறை காட்டி வாழ்ந்தவர்; வாழ்ந்து காட்டியவர். இவ்வளவு வருடங்களும் இருக்கின்றாரா என்பது தெரியாது இருந்தவர். திடீரென அறிக்கைவிட்டார்; 'பெரும் கூட்டம்' வைத்தார். மக்கள் அயர்ந்துவிட்டனர். மாரிகாலம் தானே, மழைபெய்யும் என எண்ணுவது; இவரது 'சேவையை' எண்ணியெண்ணி நெஞ்சம் நெக்குருக கண்ணீர்விட்டனர்.

திடீரென தமிழ்ப்பற்று இவரை ஆட்கொண்டதாம்; ஏது இவரும் 'தமிழ் சாதி' பற்றி பேசுகின்றாரே என மக்கள் கேள்வி கேட்கவில்லை; ஒண்டுவளைப் பிடித்த நரியனார் கதை நமக்கு நன்றாகத் தெரியும் எனக் கதைத்துக் கொண்டனர்.

சரஸ்வதி பூங்காவனத்தில் பெருங்கூட்டம்: மக்கள் வெள்ளம் திரண்டு நின்றதாம். இவருக்குத் திரண்ட மக்கள் வெள்ளத்தைப் பற்றிப் பத்திரிகைகளும் விபரித்தன. விடயம் தெரியாதவர்கள் ஆச்சரியப்பட்டனர்; தெரிந்தவர்கள் சிரித்தனர்;

சரஸ்வதி பூங்காவனம் எங்குளாதுா் இவரது இல்லத்தின் பெயர். பொதுவிடத்தில் கூட்டம் வைக்கத் துணிவில்லாத இவர், தனது இல்லத்தில் ஒரு தேனீர் விருந்தளித்தார். அவ்வளவுதான். இதற்குத்தான் இவ்வளவு ஆர்ப்பாட்டம்.

### கொள்கை எது?

இவரது அரசியல் வாழ்க்கையில் எப்பொழுதாவது ஸ்திரமான கொள்கைப் பற்றுக்கொண்டிருந்தாரா? தனது நலனுக்காகக் கட்சி துறந்து புதுக்கட்சி கண்டவர்;

புதுவெள்ளம்போல அக்கட்சியும் தோன்றியவுடனேயே மறைந்துவிட்டது. மொழி விடயத்தில் இவரது கொள்கை யாது? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனது கொள்கை சிங்களம் மட்டும்தான்' என்று பல வருடங்களாக சொல்லாமல் சொல்லி வந்திருக்கின்றார்.

அப்படிப்பட்டவர் இப்பொழுது ஏதோ தானொரு கொள்கைவாதி என முழங்கினாராம். 'யப்பான் நாட்டரிசியா, கிளிநொச்சி அரிசியா சிறந்தது? என்று ஒரு கேள்வியை யெழுப்பிவிட்டு மக்கள் கூட்டம் கைதட்டுமா என்று எதிர்பார்த்து நின்றாராம். கைதட்டவில்லை.

இவர்கள் கைதட்டவில்லையே என்ற மனவருத்தத்தில் 'தேனீரின்முன் சிற்றுண்டியும் உண்டு' என்றுகூறி முடிக்குமுன்பே, வானைப் பிளக்கும் கைதட்டல், ஆரவாரம் எல்லாம் கிடைத்ததாம் இக்'கொள்கை'வாதிக்கு.

**இவருக்கேது கட்சிப்பற்று?**

ஜனநாயக நாட்டில் பல கட்சிகள் இருப்பது

**சாவகச்சேரி**

**தொகுதி**

**மக்களின்**

**சிந்தனைக்கு...!**

இயற்கை. அவசியமும்கூட. ஒரு சமுதாயத்தின் நலன்களைப்பேணிக் காப்பாற்றும் தலைவர்களிடம், கொள்கைகளில், தங்களது திட்டங்களை செயல்படுத்தும் முறைகளில், மார்க்கங்களில், கருத்து வேற்றுமைகள் உண்டாகலாம். அதனை மக்களும் ஆதரிப்பர்.

தங்களது சுய நலன்களைப் பூர்த்தி செய்யும் வழிமுறைகளிலும் அரசியல் தலைவர்களிடம் வித்தியாசம் ஏற்படலாம்; ஆனால் அப்படிப்பட்ட தலைவர்களை மக்கள் ஆதரிப்பதே இல்லை. இதற்குச் சரித்திரமே சான்று பகர்கின்றது.

தனது சுயநல வேட்டையில் தோல்விகண்டு, அரசியல் அஞ்ஞான வாசம் கொண்ட திரு. வே. குமாரசுவாமி அவர்கள் ஒரு கட்சியாளராக எப்பொழுதாவதுதிகழ்ந்ததுண்டா? காங்கிரஸ் கட்சியில் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, அரை மந்திரிப் பதவிக்காக கட்சியை 3ய துறந்தார்.

தனது தலைவனையே உதைத்த கொத்தலாவலையை அணைத்துக் கொண்ட ஒரு கட்சிப் "பக்தன்.",

'வாலறுந்த நரியே' என திரு. ஜீ ஜீ. யை வர்ணித்து எக்காளம் இட்டிருந்த காலத்தை மறந்து விட்டாரா? அத்தோடு நிற்காது தனக்கென அடுப்படி. முன்னணி என்று ஒரு கட்சியை உண்டாக்கிய தான் தோன்றித் தலைவரல்லவா? இவரது கட்சியெங்கே? இவரது கொள்கையென்ன? துச் சுய நல விரும்பி மக்களுக்குச் செய்த தொண்டுதானென்ன? அவரே கூறட்டும்!

(9ம் பக்கம் பார்க்க)

## ஆகும் வழியெது? ஆகா வழியெது?

"தமிழரசுக் கட்சி, தனது பேச்சாலும், நடவடிக்கைகளாலும் சிங்களவர்களின் மனதில் வெறுப்பையும், விரோதத்தையும் பயத்தையும் வளர்த்துவிட்டது. சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெருமல் தமிழர்கள் எந்த உரிமையையும் பெறமுடியாது"

—இது தமிழரசுக் கட்சி மீது தமிழ் காங்கிரஸ் சுமத்தும் ஒரு குற்றச்சாட்டு!

சிங்களவர்களின் மனதில் வெறுப்பையும் விரோதத்தையும் வளர்த்துவிட்டதாக தமிழ் காங்கிரஸ் கூறும் நடவடிக்கைகள்தான் என்ன?

தனிச் சிங்களம் தமிழர்களின் தொண்டைக்குள் பலவந்தமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து—

தமிழுக்கு இந்நாட்டின் ஆட்சியில் உரிய இடம் மறுக்கப்படுவதை எதிர்த்து—

தமிழர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களை பல்லாயிரக்கணக்கில் குடியேற்றி தமிழர் நாட்டை ஆக்கிரமிப்பு நடத்துவதை எதிர்த்து—

வாழு-வாழவிடு என்ற கொள்கையை முன்வைத்து—

தமிழரசுக் கட்சி பல அஹிம்சைப் போராட்டங்களை நடத்தியது!

அதுவும் சிங்களப் பெரும்பான்மை மக்களை தமிழரசுக் கட்சி எதிர்க்கவில்லை!

சிங்கள ஏகாதிபத்தியம் தமிழினத்துக்கு இழைக்கும் தீமைகளையே அறவழியில் எதிர்த்துப் போராடியது! போராடி வருகிறது!

இப்போராட்டங்களில் தமிழரசுக் கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் தங்களை தாங்களே வருத்தி துன்பங்களை துணிச்சலுடன் ஏற்றுக்கொண்டார்களே தவிர—

தமிழரசுக் கட்சியின் போராட்டங்களினால் எந்த ஒரு, சிங்களப் பிரஜைக்கும் ஒரு சிறு துன்பம்கூட நேர்ந்திடவில்லை!

1956 முதல் 1965 வரை ஒன்பது நீண்ட ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தியாகப் பாதையில் நடந்து; தமிழினத்தின் உரிமைப் போராட்ட வேள்வித்தீயில் குதித்து சிறைபட்டு—சித்திரவதைப்பட்டு—தொண்டர்களையும் தலைவர்களையும் பலி கொடுத்து அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டு—தமிழ் மொழியின் உரிமையை ஓரளவு நிலை நாட்டிவிட்ட வேளையில்—

சிறுபான்மை மக்களின் ஆதரவு இன்றி எந்தச் சிங்களக் கட்சியும் ஆட்சியமைக்க முடியாது என்பதை உணரவைத்து விட்ட வேளையில்—

போராட்டத்தில் கலந்துகொள்ளாது கோழைகளாய் மோழைகளாய்—ஓடி ஒளித்து, வீட்டுக்குள் பூட்டி கிடந்து ஐந்தாம்படை வேலைபார்த்த தமிழ் காங்கிரஸ்காரர்கள் இன்று 'விவேகம்' பேச வெளிப்பட்டிருக்கிறார்கள்!

தமிழினமே! நீ கொலைசெய்யப்பட்டாலும், கொடுமைப்படுத்தப்பட்டாலும் கொஞ்சமேனும் எதிர்த்துப் போராடாதே! அப்பொழுது தான் உன்னைக் கொலை செய்பவனின் 'நல்லெண்ணம்' உனக்குக் கிடைக்கும்!—இப்படித்தான் கூறுகிறது தமிழ் காங்கிரஸ்!

இனம் 'கொலை' செய்யப்பட்ட பின்னர் 'நல்லெண்ணம்' யாருக்கு வேண்டும்! தமிழர்கள் சிந்திக்கவேண்டும்!

'தனிச் சிங்களச் சட்டமா? நாங்கள் ஒருபோதும் எதிர்க்க மாட்டோம். இருந்தாலும் தமிழுக்கும் ஏதாவது கொஞ்ச நஞ்ச...ஹி...ஹி...ஹி...!இல்லாவிட்டாலும் பரவாயில்லை. கோபம் வேண்டாம்.'

'பௌத்தம் தான் அரசாங்க மதமா? ஏற்றுக் கொள்ளுகிறோம் பிரபோ! பௌத்த கோவில்களை எமது பகுதிகளில் நிறுவி பௌத்தத்தை வளர்க்க வேண்டிய அளவு உதவுகிறோம்!'

'வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதை நாம் எதிர்க்கவே மாட்டோம். ஹி... ஹி...ஹி...இலங்கையைத் தமிழ்ப் பகுதி சிங்களப் பகுதியென்று பிளவுபடுத்துவதை நாம் விரும்புவோமா? தாராளமாகக் குடியேற்றுங்கள்! முன்பே இதை ஆதரித்தோம்: மறந்து விட்டீர்களா? ஆனால் தென்னிலங்கையில் நமது மக்கள் ஏதாவது கடை. கண்ணி வைப்பதற்கு மட்டும் கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும்!'

"இந்தியாக்காரன்கள் அவ்வளவு பேரையும் அப்படியே மூட்டை முடிச்சுகளோடு ஏற்றி அனுப்பி விடுவதை நாம் ஆதரிக்கிறோம். அவர்கள் வந்துதானே உங்களுக்கு (சிங்களவர்களுக்கு) வேலை வாய்ப்பே இல்லாமற் போச்சு அதனால் தானே எங்கள் கட்சி அவர்களை நாடற்றவர்களாக்கும் சட்டத்தினை 1948-ம் ஆண்டு ஆதரித்தது.'

"போதனு மொழியாகத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களமே இருக்க வேணடும் என்கிறீர்களா? பிளிஸ்...இது விடயத்தில் கொஞ்சம் கருணை காட்டுங்கள். இல்லாவிட்டாலும்... நாங்கள் இதை எதிர்க்கமாட்டோம். இருந்த போதும் கொஞ்சம்... ஹி... ஹி.... ஹி...!'

"சிங்களவர்களாகிய உங்களுக்கு அரசியல் ஆதிக்கத்தை தந்த ஒற்றையாட்சியை நாம் எதிர்ப்போம் என்று அஞ்சுகிறீர்களா? எதிர்க்கவே மாட்டோம். நீங்களே தமிழர்களை எப்போதும் ஆளுங்கள். ஆனால் எங்களை உங்கள் உண்மையான அடிமைகளாக ஏற்றுக்கொண்டு அரச உத்தியோகங்களிலும் தொழில்துறையிலும் ஏதாவது சிறு சலுகைகளாவது தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.""

—மேற் கூறியதுபோல நடந்துகொண்டு தான் சிங்கள மக்களிடையே 'நல்லெண்ணத்தை' நிலைநாட்டப் போகிறதாம் தமிழ் காங்கிரஸ்.

இதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாவது மேலல்லவா?

தன்மானத் தமிழினமே! நீ பின்பற்றக்கூடிய வழியெது? ஆகும் வழியெது? ஆகா வழியெது? தமிழ் காங்கிரஸ் வழியா? தமிழரசு காட்டும் வழியா?

—கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துரோகிகளைக் கண்டறிந்து அவர்களை ஓட ஓட விரட்டுங்கள்!

## யாழ் நகரை நோக்கி மலையகம் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்!

"தமிழ் மக்கள் தனிப்பட்ட ஒருவருக்காக வாக்களிக்கக் கூடாது. கட்சிக்காகவும் கொள்கைக்காவும் வாக்களிக்க வேண்டும்"— இவ்வாறு திரு. ஜீ. ஜீ. அவர்கள் அண்மையில பேசியிருப்பது வரவேற்புக்குரிய கருத்தாகும்.

தூங்கிக்கிடந்த மலையகத்தை சில சிங்கள தலைவர்களும் பத்திரிகைகளும் துவேசப் பிரசாரம் செய்து, தட்டி எழுப்புவது போல தனிபட்ட ஒரு நபருக்காக மட்டும் வாககளித்து, தமிழ் இனத்தையே காட்டிக் கொடுத்த தனிப்பட்ட தலைவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த மக்களை தட்டி எழுப்புகின்றது திரு. ஜீ. ஜீ. அவாகளின் இந்தக் கருத்து.

திரு. ஜீ. ஜீ இவ்வாறு பேசிய அதே மேடையில் நின்று அதுவும் அதே மக்களின முன் "மற்றவர்களை ஆதரிக்காதீர்கள். எங்களை மட்டும் ஆதரித்து திரு. ஜீ ஜீ. தலைமையில் எங்களையே தனிப்பெரும் தலைவர்களாக தேர்ந்தெடுங்கள் (நாங்கள் உங்களுக்கு யானையையும், குதிரையையும் பிடித்து விளையாட்டு காட்டுகிறோம்) என்று திரு. சிவசிதம்பரம் கூறியிருப்பது கண்டு சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

மற்றவர்களைப் பார்த்து என்ன செய்து விட்டீர்கள்? என்று கேட்பதை விட்டு, நாங்கள் என்ன செய்யவில்லை? என்று கேட்டு இருந்தார் என்றால் அவருடைய திறமையை பாராட்டத் தான்வேண்டும். அதைவிட்டுவிட்டு அவாசன என்ன செய்தார்கள்? என்று பொது மக்களைக் கேட்டுக் கொண்டிருப்பது கேலிக் கூத்தாகும். இதனை யாழ் மக்களும் நன்குணர்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லாவிட்டாலும் நானும் அவர்களை சற்றே சிந்திக்க வேண்டுகிறேன்.

தமிழ் மொழியும் தமிழ் இனமும் ஈழத்தில் தனியிடம் பெற்று தரணிபுகழ்பாடும் அளவிற்கு உயர்வு பெறுவிட்டாலும்கூட, தமிழ் என்று ஒரு மொழியும் அம் மொழியைப் பேசும் ஒரு இனமும் ஈழத்திலும் உண்டு என்பதை தரணிக் கெடுத்துக் காட்டுவது—காட்டியது யார்? தமிழரசா? அல்லது தமிழ் காங்கிரசா? பால்மனம் மாறுத பச்சிளங்குழந்தையும் கூறுமே—தமிழரசார் என்று. அதுமட்டுமா?

தமிழ் மொழி வளர்க்க, தமிழ் மக்கள் மானம்காக்க, நாட்டின் ஆட்சியை எதிர்த்து, எங்களை அவமதித்தால் உங்களை நாங்கள் அவமதிக்காமல் விடமாட்டோம்! எங்களைக் காத்துக் கொள்ள எங்களுக்கு தெரியும், என்று தளராது ஆட்சிக்கே சவால் விட்டு, தனிப்பட்ட தபால் நிலையங்களை அமைத்து நடத்திக் காட்டினர்களே தமிழரசார் அன்று அவர்களின் அயராது உழைக்கும் உழைப்பிற்கும், தமிழ் பற்றிற்கும் எடுத்துக் காட்டாக அது போதாதா?

அஹிம்சா முறையில் போராடி அல்லல் பல அடைந்தார்களே அந்த அறிஞர்களும் அறிவுமிகுந்த தலைவர்களும்—அது போதாதா அவர்களின் இனப் பற்றிற்கும், மொழிப் பற்றிற்கும் எடுத்துக்காட்டாக!

இவ்வளவும் செய்த அவர்களைப்பார்த்து, என்ன செய்தார்கள் என்று கேட்கும் இவர்களை இவர்கள் என்ன செய்தார்கள் என்று நான் கேட்கிறேன். ஏன்...... நீங்களும் கேட்டிருப்பீர்கள். பதில் கிடைத்திருக்காது என்பது என்னவோ உண்மை.




மனிதன் முன்னேற முயற்சிதேவை. அத்தோடு தன்னம்பிக்கையும் தேவை. இந்த அடிப்படையில் நம்பிக்கையோடு தமிழிற்கு தனியிடம் கொடுப்பார்கள் என்று அன்று ஐ. தே. க. வுடன் கூட்டு சேர்ந்தார்கள். ஆனல் அவர்களின் நம்பிக்கை ஓரளவு மோசம் போயிருந்தாலும் கூட சில விசயங்களில் அவர்கள் வெற்றிப் பாதையையே நாடி சென்ருர்கள். சிலவற்றில் வெற்றியும் கண்டு விட்டார்கள்.

சிலவற்றில் வெற்றிக்கொடி நாட்டும் வேளையில் அங்கே-கற்பாறை இருப்பது கண்டு கலங்கிஞர்கள். பால் பொங்கிவரும் வேளையில் பால்பானை உடைந்தது போல பாடுபட்டு வெற்றிக் கொடி நாட்டும்போது அங்கே கற்பாறை வந்து தடைசெய்துவிட்டது.

அங்கே எப்படி புதிய கற்பாறை தோன்றியது? அந்தப் பாறையை அங்கே வைத்தவர்கள் யார்? சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்கள் தலைவர்கள் மட்டுமல்ல யாழ் மக்களும், மலையக மக்களும் சேர்ந்து சிந்திக்கவேண்டும். சிந்தித்து பார்த்தால் பார்த்சிந்தை தெளியும். தமிழரசாருக்குத் தடைபோட்டவர்கள் யார் என்பது தெரியும்.

ஒன்றை, இங்கு சுட்டிக் காட்டாமல்இருக்கமுடியாது: தமிழர்களுக்கு பல்கலைக்கழகம் வேண்டும் என்ருர்கள்; ஆட்சியாளர் நல்ல எண்ணத்தோடு அதனை ஏற்படுத்தி கொடுக்க முன்வந்தபொழுது இடையில் குட்டிக் குழப்பம் ஒன்றை ஏற்படுத்தியவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்; குழப்பம் ஏற்படுத்தியதால் கிடைக்க இருந்த பல்கலைக் கழகமும் கிடைக்காமல் போனது. இதற்கெல்லாம் யார் காரணம்? சுயநலம் பிடித்த தமிழ் காங்கிரஸ் தலைவர்களல்லவா?

எனவேதான் வாய் வீரர்களையும் காட்டிக்கொடுப்பவர்களையும் நம்பி ஏமாந்துவிடாது எச்சரிக்கையாக இருந்து தமிழ் மக்கள் மானத்தைக் காக்க வேண்டுகிறோம். காட்டிக் கொடுப்பவர்களால் நமக்கு நன்மை செய்யமுடியாது என்பதை நன்குணர்ந்து செயல்பட வேண்டி நிற்கின்ருேம்.

**கே. ஆர். எம். தமிழ்த்தம்பி**
**அக்கரபத்தனை.**

## இலங்கைப் பதிவுப் பிரசைகள் நலவுரிமைச் சங்கம்

இலங்கைப் பதிவுப் பிரசைகள் நலவுரிமைச் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் உதயமாகியுள்ளது. இச் சங்கக் கிளை ஸ்தாபனங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் நிறுவப்பட இருக்கின்றன.

இச்சங்கத்தின் அமைப்புக் குழுச் செயலாளர் திரு. த. ம. பீற்றர் பொன்கலன்ட் சுதந்திரன் நிருபரிடம் இது பற்றித் தெரிவித்ததாவது:-

1964-ம் ஆண்டின் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கைப் பிரஜாவுரிமை கோரிப் பல ஆயிரக்கணக்காஞேர் விண்ணப்பித்தும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றது. இப்படி விண்ணப்பித்தவர்களுக்குப் பிரஜாவுரிமை விரைவில் கிடைக்க ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதே இச்சங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

மேலும் இச்சங்க அடிப்படை நோக்கங்களாவன:-

(1) 'இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு முடிக்குரிய காணிகள் பெற ஒழுங்கு செய்தல்.

(2) மலையகத்தில் வாழும் பதிவுப்பிரஜைகளுக்கு வவுனியா கிளிநொச்சி திருமலை ஆகிய இடங்களில் குடியேறக் குடியேற்றத் திட்டங்கள் அமைத்தல்.

(3) மலையகத்தில் வாழும் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற ஒழுங்கு செய்தல். விசேடமாக உப உணவு அபிவிருத்தித் திட்டத்தில் இவர்கள் காணி பெற ஒழுங்கு செய்தல் என்பனவாகும்.

எனவே, இச்சங்கத்துடன் தொடர்புகொள்ள விரும்புவோர் த. ம. பீற்றர் பொன்கலன்ட், செயலாளர் இலங்கைப் பதிவுப் பிரஜைகள் நலவுரிமைச் சங்கம், நெடுங்கேணி என்ற எனது முகவரிக்கு எழுதலாம்.'

## உங்களுக்கு 'நீரிழிவு' நோய் உண்டா?

நீரிழிவு வராமல் இருப்பது நல்லது. அப்படி வந்துவிட்டால் உணவு கட்டுப்பாடு வைத்துக் கொண்டால் அதன் கொடுமைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அதன் சார்பு நோய்களும் தோன்ருமல் இருக்க உதவும். உடல் நலத்திற்கும் உணவுக் கட்டுப்பாடு பெரிதும் பயன்படும்.

எந்த ஆகாரத்தைச் சாப்பிடுவது எதைச் சாப்பிடக் கூடாது என்றவிபரம் பொதுவாக நீரழிவு நோயாளிகள் அறிந்திருப்பது நல்லது. கீரை வகைகளையும், காய்கறிகளையும் அதிகமாகப் புசிக்கலாம். அப்போது தான் மலச்சிக்கலைத் தடுக்க முடியும்; உதாரணமாக முளைக்கீரை, அரைக்கீரை, ஆராக்கீரை, ஒரிலைத் தாமரை, வெந்தயக்கீரை, பொற்றலைக்கையாந்தகரை, பசலைக்கீரை பொன்ஞங்காணி, கலவைக்கீரை இவைகள் மிகவும் சிறப்புடையன.

காய் கறிகளில் பிஞ்சுக் கத்தர்க்காய், வெண்டைக்காய், முருங்கக்காய், காலிபிளவர், வெள்ளரிக்காய், தக்காளிப் பழம், முட்டைக்கோஸ், அவரைக்காய், புடலங்காய், அத்திக்காய் முதலியவைகள் சாப்பிடலாம்.

பழவகைகளைப் பொறுத்தமட்டில் பொதுவாக இனிப்பு கொடுக்கக்கூடிய பழவகைகள் நீரிழிவுக்காரர்களுக்கு ஆகாது. இருந்தாலும் ஒரு சில பழவகைகள் சாப்பிடலாம்' தினம் எலுமிச்சம் பழரசமும், தேனும் கலந்து சாப்பிடலாம். நாவல்பழம் மாதுளம்பழம், விளாம்பழம் முதலியன சாப்பிடலாம். மற்றும் துவர்ப்பும், கசப்பும் கூடிய பழவகைகளைச் சாப்பிடலாம்.

மாமிச உணவைப் பொறுத்தமட்டில் நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் பொதுவாகச் சைவ உணவே வைத்துக் கொள்வது சாலச் சிறந்ததாகும். கொழுப்புப் பொருட்களை அறவே நீக்கி விடுவது நல்லது. தினம் வெந்தயக் கஞ்சி, கொள்ளுக் கஞ்சி, கோதுமைக் கஞ்சி பாசிப்பயறுக் கஞ்சி, உளுத்தம் பருப்புக் கஞ்சி இப்படி மாற்றி மாற்றிக் கஞ்சி சாப்பிட்டால் ருசியாகவும் இருக்கும். பித்த கபவாதத்தையும் சயன் செய்யும். சிறு நீரகங்களுக்கு வலுவுண்டாகும்.

### டாக்டர் கே. ராதாகிருஷ்ணன்

நீரிழிவுக்காரர்கள் அரை வயிறு ஆகாரம் உண்பது நல்லது. ஆடை நீக்கிய மோர் சாப்பிடுவது நல்லது.

நிரிழிவை மூலிகைகள் மூலம் ஓரளவு போக்கிக் கொள்ளலாம்.

(1) நூறு வருடம் சென்ற வேப்பம்வேர் பட்டை, அடிமரப் பட்டை, பூ, பிஞ்சு, துளிர் இலைகளைக் காய வைத்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு திரிகடி அளவு தினம் காலை, மாலை உண்டு வரலாம்;

(2) ஆவாரைவேர்பட்டை பூ, விதை, இலை இவைகளை மேற்சொன்னபடி செய்து சாப்பிட்டு வரலாம்.

(3) நூறு வருடம் சென்ற வன்னிப்பட்டை, இலை இவைகளை இடித்து வைத்துக் கொண்டு எருமைத் தயிரில் கலந்து தினம் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் நீங்கும்.

(4) வெள்வேலன் பூ, காய், இலை இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து தினம் வெறுகடி வீதம் சாப்பிட நீரிழிவு நீங்கும்.

(5) சிறுகுறிஞ்சான் (சர்க்கரைக் கொல்லி) சமூலம் எடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து தினம் எலுமிச்சம்பழச் சாற்றில் சாப்பிட்டு வந்தால் விடாத் தாகம், இருமல் முதலியன போகும்.

(6) ஓரிலைத் தாமரை, வல்லாரை இலைகளை உலர்த்தி இடித்து, சம அளவு எள்ளு இடித்த சூரணம் கலந்து வைத்துக் கொண்டு சாப்பிடலாம்.

(7) வறுத்து இடித்த சாம அரிசி மாவுடன் நாள்பட்ட வேப்பமரத்திலிருந்து எடுக்கப்பட்ட பிசினைக் காய வைத்துப் பொடி செய்து, மேற்படி அரிசிமாவுடன் கலந்து திரிகடி அளவு உண்டு வந்தால் நீரிழிவு அறவே நீங்கும்.

"உற்ருன் அளவும்
பிணியளவும் காலமும்
கற்ருன் கருதிச் செயல்"
—குறள்.

மற்றும் அவரவர்கள் யுக்திக்கும் சரீர பாகுபாட்டிற்கும் தகுந்தாற் போல் தமிழ் மூலிகைகளைச் சாப்பிட்டு நோயினின்று விடுதலைபெற்று நூறாண்டு வாழப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது


# சிலோன் தியேட்டர்சாரின் திரைகளில்

## 3வது வாரமாக

செல்லமகால் (கொழும்பு) இம்பீரியல் (மட்டுநகர்)

வின்சர் (யாழ்நகர்)





வாழ்க்கையில் வெற்றிபெற என்ன செய்யவேண்டும்? என்பதை தத்ருபமாக விளக்குகிறது.

நாகேஷ், சௌகார் ஜானகி, முத்துராமன்

—நடித்த—

# எதிர் நீச்சல்

கெயிட்டி (கொட்டாஞ்சேனை) விலாசினி (தெகிவளை)

நெல்சன் (திருமலை)

இரு நண்பரிடையே ஏற்பட்ட வாழ்க்கையைப் பற்றிய பிரச்சினையை விளக்கும் படம்.




பந்தயம்



ஜெமினி, ஏ. வி. எம். ராஜன், நாகேஷ், விஜயநிர்மலா —நடித்த—

# பந்தயம்

## 3வது வாரம்



கிங்ஸ்லி (கொழும்பு)

பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ் நகர்)

விஜயா (மட்டு நகர்)

வெம்பிளி (கண்டி)

சிவாஜி, பத்மினி, கே. ஆர். விஜயா நடிக்கும்

# பாலாடை

திரைக்கதை டைரக்ஷன்: பீம்சிங்

சப்பயர் (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை)

ரவிச்சந்திரன் (இரட்டை வேடங்கள்)

ஜெயலலிதா, நாகேஷ், மனோரமா, வி. கே. ராமசாமி, எஸ். ஆர். ஆர். வாசு நடித்த



# பணக்காரப் பிள்ளை

கெப்பிட்டல் (கொழும்பு) எம். ஜி. ஆர், சரோஜாதேவி நடித்த

# பெரிய இடத்துப் பெண்

## ஜனத்திரள் நிறைந்த காட்சிகளுடன் 2 வது வாரமாக காட்சியளிக்கிறது!


கருத்து நிறைந்த வசனங்கள்! கண்கவர் காட்சிகள்! நெஞ்சையள்ளும் அற்புத நடிப்பு! உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிமயமான சம்பவங்கள் பலவற்றைக் கொண்ட உன்னதச் சித்திரம்!!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஜோதி (திருமலை)

★ காதல் மன்னன் ஜெமினி கணேஷன், ★ எஸ். வி. ரங்கராவ்,
★ எஸ். எஸ். ராஜேந்திரன், ★ நாகேஷ், ★ எஸ். வி. சுப்பையா,
★ வி. கே. ராமசாமி, ★ பத்மஸ்ரீ சரோஜாதேவி, ★ ராஜசுலோசனா,
★ குமாரி சச்சு, ★ ஜி. சகுந்தலா, ★ ரேணுகா, ★ ராதாபாய்,
'டோமி' (நாய்) மற்றும் பலர் நடித்த

'இயக்குநர் திலகம்' கே. எஸ். ஜி.யின்

# குல விளக்கு



கதை-வசனம்-டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன். (பாஸ்கர் ரத்து) இசை: கே. வி. மகாதேவன்.

வெகு விரைவில்

'மக்கள் திலகம்' எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, மனோகர், அசோகன், ஜோதிலட்சுமி, ராஜஸ்ரீ, சோ, சந்திரபாபு, நடித்த, —புரட்சி நடிகரின்—

# அடிமைப் பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருடம் நவம்பர் மாதம் 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411